# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2023 - 2024

### மானியக் கோரிக்கை எண். 4


**என். கயல்விழி செல்வராஜ்**

ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2023

# பொருளடக்கம்


| தொடர் எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| | தொலைநோக்குத் திட்டம் | 2 |
| | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்கள்(SCSP & TSP ) | 9-13 |
| | நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்-2030 | 13-14 |
| I. | **ஆதி திராவிடர் நலன்** | |
| 1. | கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் | 16-52 |
| 2. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல் | 52-54 |
| 3. | மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி | 54-55 |
| 4. | சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்பாட்டில் கொண்டிருக்கும் கிராமங்களுக்கு பரிசுத் தொகை வழங்குதல் | 55 |

| தொடர் எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 5. | ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் | 55–56 |
| 6. | ஈமச்சடங்கு உதவித்தொகை | 57 |
| 7 | பிரதம மந்திரியின் ஆதி திராவிட மக்கள் முன்னேற்றத் திட்டம் | 57–58 |
| 8. | சாதிச் சான்றிதழ்களின் மெய்த் தன்மையை சரிபார்த்தல் | 59–60 |
| 9. | 1955 ஆம் ஆண்டு குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015 | 60–65 |
| 10. | தமிழ் நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் | 66–67 |
| 11. | டாக்டர். அம்பேத்கர் விருது | 67–68 |
| **II.** | **பழங்குடியினர் நலன்** | |
| 1 . | கல்வி | 70–94 |
| 2. | அடிப்படை கட்டமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் | 94–104 |

| தொடர் எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 3, | பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம் 2006 | 105–108 |
| 4. | பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல் | 108–110 |
| 5. | பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் | 110–113 |
| 6. | சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் | 113 |
| III. | **தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)** | |
| 1. | பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | 115–133 |
| 2. | இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல் | 133–142 |
| 3. | கட்டுமானப் பணிகள் | 142–146 |
| **IV.** | **தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம்** | 147 |

| தொடர் எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| V. | **நலக் குழுக்கள்** | |
| (அ) | மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு | 148–149 |
| (ஆ) | தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் | 149–150 |
| VI. | **நல வாரியங்கள்** | |
| 1. | புதிரை வண்ணார் நல வாரியம் | 151–152 |
| 2. | தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம் | 152–154 |
| 3. | பழங்குடியினர் நல வாரியம் | 154–155 |
| VII. | **ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 2023–2024–ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு** | 156 |

# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2023 – 2024

## முன்னுரை:

"சாதி ஒழித்திடல் ஒன்று – நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று
பாதியை நாடு மறந்தால் – மற்ற
பாதி துலங்குவதில்லை"

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் இவ்வரிகளுக்கேற்ப, சாதி வேறுபாடுகளற்ற, சமூக நீதி அடிப்படையிலான சமத்துவ சமுதாயத்தினை நிறுவுவதில் உறுதி பூண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையின் கீழ் இயங்கி வரும் தமிழ்நாடு அரசு, சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை அனைத்து நிலைகளிலும் உயர்வடையச் செய்வதற்கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

## தொலை நோக்குத் திட்டம்

- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் கல்வி மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்துவதன் மூலம் அவர்களின் கல்வி, தன்னம்பிக்கை மற்றும் ஆளுமைத் திறன் போன்ற செயல்திறன்களை உயர்த்துதல்.

- சமூகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் அம்மக்களின் சமூக பொருளாதார நிலையினை உயர்த்தி அவர்களை சமூக நீரோட்டத்திற்குள் கொண்டு வருதல்.

- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் குறிப்பாக, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரின் நலன் தொடர்பான ஒருங்கிணைந்த வளர்ச்சி இலக்கினை 2030–ஆம் ஆண்டிற்குள் எட்டுதல்.

சமூகத்தின் இதர பிரிவினருக்கு இணையாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை கல்வியறிவு மற்றும் சமூக–பொருளாதார நிலைகளில் உயர்த்தி, அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1988–ஆம் ஆண்டில் சமூக நலத்துறையிலிருந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தோற்றுவிக்கப்பட்டது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ், ஆதி திராவிடர் நல இயக்குநரகம், பழங்குடியினர் நல இயக்குநரகம், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் காவல் பிரிவு, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம் மற்றும் பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் ஆகிய துறைத் தலைமை அலுவலகங்கள் மற்றும் பல நல வாரியங்களும் இயங்கி வருகின்றன.

ஆதி திராவிட மக்களின் முன்னேற்றத்திற்காக பள்ளிகள் மற்றும் விடுதிகளைத் தோற்றுவித்து நடத்துதல், அவர்களது குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், வீட்டுமனை பட்டா வழங்குதல், பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் ஆதி திராவிட மக்கள் எதிர்கொள்ளும் சமூக சிக்கல்களுக்கு தீர்வு அளித்தல் ஆகிய பணிகள் **ஆதி திராவிடர் நல இயக்குநரகம்** மூலமாக கையாளப்பட்டு வருகின்றன.

பழங்குடியினரின் கல்வி மற்றும் சமூக மேம்பாடு தொடர்பாக பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை நடத்துதல், அவர்களது குடியிருப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், வன உரிமைச் சட்டத்தினை செயல்படுத்துதல் மற்றும் அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகிய பணிகள் **பழங்குடியினர் நல இயக்குநரகம்** மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)** மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை பொருளாதார மேம்பாடு அடையச் செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் மானியத்துடன் கூடிய பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் இளைஞர்கள் சுய தொழில் துவங்கிட மற்றும் வேலைவாய்ப்புக்கான திறன் பெற்றிட ஏதுவாக அவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல் மற்றும் கட்டுமானப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 ஆகிய சட்டங்களை அமல்படுத்துவதன் மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான பல்வேறு கொடுமைகளைத் தடுத்து, அவர்களின் உரிமைகளை

காவல் துறையின் **சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு** பாதுகாத்து வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் இயங்கி வரும் **பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்** தமிழ்நாட்டில் வசிக்கும் 37 வகையான பழங்குடி இனங்களின் மொழி மற்றும் கலாச்சாரம் குறித்த ஆராய்ச்சியினை மேற்கொண்டு வருகிறது.

**தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம்** தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டப்பூர்வமான உரிமைகளை பாதுகாத்திடும் மேலான பணியிலும், அவர்களது பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் பணியிலும் ஈடுபட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான **மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு** 1955–ஆம் ஆண்டு குடிமையியல்

பாதுகாப்புச் சட்டம், மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம் 2015 ஆகியவற்றின் செயலாக்கத்தினை கண்காணித்து வருகிறது.

**தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம்** மூலமாக புதிரை வண்ணார் இன மக்களுக்கான பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பழங்குடியின மக்களின் நலனுக்கான பல்வேறு திட்டங்கள் அவர்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்தும் வகையில் **தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்** செயல்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம்** தூய்மைப் பணிபுரிவோருக்கான நலத்திட்டங்களின் செயலாக்கத்தை கண்காணித்து வருகிறது.

**தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம்,** தமிழ்நாட்டில் வசித்து வரும் பழங்குடியின மக்களுக்கான புதிய திட்டங்களை திட்டமிடவும்,

அவர்களது ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்கான சிறப்பான ஆலோசனைகளை வழங்கிடவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை அதிகரித்திடும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்திடும் பொருட்டு, 2023–2024–ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் **ரூ.3,512.85 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்கள் (SCSP & TSP )

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை சமூக–பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் உயர்த்திடும் நோக்குடன் தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் துணைத் திட்டம் 1980–1981–ஆம் ஆண்டிலிருந்தும் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் 1976–1977–ஆம் ஆண்டிலிருந்தும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்களுக்காக மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப முறையே 20.01% மற்றும் 1.17% அளவிற்கு இணையாக மாநில அரசின் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில் இருந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டங்களின் கண்காணிப்புத் துறையாக (Nodal Department) ஆதி திராவிடர் மற்றும்

பழங்குடியினர் நலத்துறை செயல்பட்டு வருகிறது. இத்துறையின் செயலாளர் அவர்கள் மாநில அளவில் கண்காணிப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அனைத்து செயலாக்கத் துறைகளும் இந்நிதியினை விரைவாகவும், முழுமையாகவும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக செலவிடும் பொருட்டு, ஒவ்வொரு மாதமும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான முன்னேற்ற அறிக்கைகள் அனைத்து செயலாக்க துறைகளிலிருந்தும் பெறப்பட்டு, துணைத் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. தலைமைச் செயலாளர் அவர்களை தலைவராகக் கொண்ட மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவால் (State Level Monitoring Committee) அனைத்து துறைகளின் திட்ட முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

2023–2024–ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டுத்திட்ட ஒதுக்கீடான ரூ.77,930.30 கோடியில், ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்காக ரூ.17,075.70 கோடி (21.91%) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக ரூ.1,595.89 கோடி (2.05%) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2023–2024 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் துணைத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் பிரிவு (SECTORAL) வாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம்**

(ரூ.கோடியில்)

| **வ. எண்.** | **பிரிவு** | ஆதி திராவிடர் துணைத் திட்டம் | பழங்குடியினர் துணைத் திட்டம் |
|---|---|---|---|
| 1 | ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 2,760.49 | 654.70 |

| வ. எண். | பிரிவு | ஆதி திராவிடர் துணைத் திட்டம் | பழங்குடியினர் துணைத் திட்டம் |
|---|---|---|---|
| 2 | வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி | 1,425.38 | 191.43 |
| 3 | ஊரக வளர்ச்சி | 1,708.81 | 206.79 |
| 4 | சமூகநலன் மற்றும் சத்துணவு | 3,899.82 | 189.77 |
| 5 | குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு | 1,221.00 | 103.00 |
| 6 | வேளாண்மையும் தொடர்பான நடவடிக்கைகளும் | 1,193.93 | 31.71 |
| 7 | கல்வி, விளையாட்டு மற்றும் பண்பாடு | 1,061.38 | 113.17 |
| 8 | மக்கள் நல்வாழ்வு – குடும்பநலன் | 855.42 | 45.95 |
| 9 | போக்குவரத்து | 150.00 | 0.00 |
| 10 | பொதுவான பொருளாதாரப் பணிகள் | 2,547.00 | 7.07 |
| 11 | தொழிலாளரும் தொழிலாளர் நலனும் | 58.35 | 7.71 |

| வ. எண். | பிரிவு | ஆதி திராவிடர் துணைத் திட்டம் | பழங்குடியினர் துணைத் திட்டம் |
|---|---|---|---|
| 12 | சிறப்பு பகுதித்திட்டங்கள் | 30.75 | 7.50 |
| 13 | தொழிலும் கனிமங்களும் | 150.35 | 32.46 |
| 14 | ஏனைய சமூகப்பணிகள் | 13.02 | 4.63 |
| **மொத்தம்** | | **17,075.70** | **1,595.89** |

## நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்–2030

2015–ஆம் ஆண்டு நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் மாநாட்டில் ஏற்படுத்தப்பட்ட "நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்" உலகளாவிய 17 குறிக்கோள்கள் மற்றும் 169 இலக்குகளின் முக்கியமான அங்கமாக விளங்குகின்றன.

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சி இலக்கு**

**"எவரும் விடுபடாமல் உள்ளடக்கிய வளர்ச்சி"** எனும் மையக்கருத்து இத்துறையுடன் நேரடித் தொடர்புடையதாகும். இத்துறையின் அடிப்படைக் கொள்கையான சமூக நீதி என்பது அனைத்து நிலையான வளர்ச்சி இலக்குகளிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் சாதனைகள் மற்றும் செயல்பாட்டினை ஆய்வு செய்வதற்காக ஒருங்கிணைப்புத் துறைகளின் செயலாளரை தலைவராகக் கொண்ட 8 செயல்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு காலமுறைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இலக்குகள் 1, 2 4, 10 மற்றும் 16 ஆகியவற்றை அடையும் நோக்கில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயற்பாட்டுக் குழுக்கள் I, III, IV மற்றும் VIII –இல் உறுப்பினராக உள்ளது.

# I. ஆதி திராவிடர் நலன்

2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 7.21 கோடியில் 20.01 விழுக்காடு (1.44 கோடி) ஆதி திராவிட மக்கள் வசித்து வருகின்றனர்.

சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழும் ஆதி திராவிட மக்களை கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் உயர்த்தி அவர்களை சமூக நீரோட்டத்தில் ஒன்றிணைக்கும் நோக்குடன் பல்வேறு கொள்கைகள், நலத்திட்டங்கள், வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்கள் ஆகியவற்றை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. இதன் விளைவாக மாநிலத்தின் பல்வேறு நிலைகளிலான ஒட்டுமொத்த கல்வி சேர்க்கை விகிதம் தேசிய சராசரியை விட உயர்ந்து காணப்படுகிறது.

## 1. கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்

"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை."

கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை எனும் தெய்வப்புலவரின் வாக்கிற்கிணங்க, ஆதி திராவிட மக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு அடிப்படையான கல்வி மேம்பாட்டிற்கு இத்துறை முன்னுரிமை அளித்து வருகிறது.

2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் பொதுப் பிரிவினரின் கல்வியறிவு 80.09 விழுக்காடாகவும், ஆதி திராவிட மக்களின் கல்வியறிவு 73.26 விழுக்காடாகவும் உள்ளது. இத்துறைக்கான 2023–2024–ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.3,512.85 கோடியில். கல்வி சார்ந்த திட்டங்களுக்காக மட்டும்

ரூ.2,206.70 கோடி(62.81 விழுக்காடு) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிட மாணாக்கரின் கல்வியறிவு வளர்ச்சி விகிதம் மற்றும் கல்வித்தரம் ஆகியவற்றை உயர்த்திடும் பொருட்டு இத்துறை ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை சிறப்பாக நடத்துவதுடன், பல்வேறு கல்வி உதவித்தொகைத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

**1 . 1 ஆதி திராவிடர் நலப் பள்ளிகள்**

ஆதி திராவிட இனத்தை சார்ந்த இளைய தலைமுறையினரை முன்னேற்றத்தின் பாதையை நோக்கி வழிநடத்திடும் பெரும் பணியில் அவர்களுக்கு கல்வி புகட்டுவதன் அவசியத்தை உணர்ந்து அவர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில், இத்துறையால் 1,138 பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

## ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் விவரம்
## 2022–2023

| பள்ளிகள் வகைப்பாடு | எண்ணிக்கை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 833 | 18,343 | 18,130 | 36,473 |
| நடுநிலைப் பள்ளிகள் | 99 | 4,762 | 4,612 | 9,374 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 108 | 6,012 | 5,439 | 11,451 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 98 | 16,000 | 14,431 | 30,431 |
| **மொத்தம்** | **1,138** | **45,117** | **42,612** | **87,729** |

ஆதி திராவிடர் மாணாக்கர் இடைநிற்றலின்றி உயர்கல்வி பெறுவதை உறுதி செய்திடும் வகையில் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், அடுத்த நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

இப்பள்ளிகளுக்கு தேவையான கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர்,

கழிவறைகள் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் கல்வித்தரத்தை உயர்த்திட ஆசிரியர்களுக்கு நவீன கற்பித்தல் உத்திகள், கணினி தொழில்நுட்பம், மொழியாற்றல் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளுள் 104 பள்ளிகளில் அறிவுத்திறன் வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் 85 பள்ளிகளில் அறிவுத்திறன் பலகைகள் (Smart Boards) அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 83 மேல்நிலைப் பள்ளிகள், 103 உயர்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் (High Tech Lab) அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 2022-2023- ஆம் ஆண்டின் முன்னெடுப்புகள்

- 51 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள கணினி ஆய்வகங்களுக்கு ரூ.87.00 இலட்சம் மதிப்பீட்டில் தடையில்லா மின்சாரம் வழங்கி (UPS) வழங்கப்பட்டுள்ளன.
- 305 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்கு தேவையான அறைகலன்கள் மற்றும் தளவாடப் பொருட்கள் ரூ.8.37 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.
- 87 ஆதி திராவிடர் நல உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளுக்கு அறிவுத்திறன் வகுப்பறைகளுக்கு அறிவுத்திறன் பலகைகள் (Smart Boards) ரூ.3.16 கோடி செலவில் வழங்கப்பட்டு வருகின்றன.
- 126 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள அறிவியல் ஆய்வகங்களுக்கு ரூ.3.15 கோடி மதிப்பீட்டில்

ஆய்வுக்கூட உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

- 2022-2023-ஆம் கல்வியாண்டில் இத்துறையின் கீழ் இயங்கி வரும் 3 ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகள் அறிவுத்திறன் வகுப்பறைகள், உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், ஆங்கில மொழிப் பயிற்சி மற்றும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத்தேர்வு (NEET) உள்ளிட்ட போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி ஆகிய வசதிகளடங்கிய மாதிரிப் பள்ளிகளாக ரூ.7.82 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

- ஆதி திராவிடர் நலத்துறையின்கீழ் இயங்கி வரும் தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கல்வி பயின்று வரும் மாணாக்கரின் கற்றல் திறன் மேம்பாடு அடையும் நோக்கில், 2021-2022-ஆம் கல்வியாண்டு முதல்

மாணாக்கருக்கு இணைய வழிக்கல்வி மூலம் கற்பிக்கப்பட்டு வருகிறது.

**கல்விச் சுற்றுலா**

தமிழ்நாட்டில் உள்ள இயற்கை வளங்கள், பறவைகள், விலங்குகள், சரணாலயங்கள் போன்றவற்றையும் நமது நாட்டின் வரலாற்றினை அறிந்து கொள்ளும் வகையில், இத்துறையின் கீழ் இயங்கும் உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளிகளில் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கரை கல்விச்சுற்றுலா அழைத்துச்செல்ல ஒரு பள்ளிக்கு ரூ.25,000/- வீதம் 206 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதி ஆண்டில் ரூ.50.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.2 கல்வி உதவித் தொகைத் திட்டங்கள்

அனைத்து குழந்தைகளுக்கும் தரமான, எளிதில் அணுகும் வகையிலான கல்வியை வழங்கி முழுமையான வளர்ச்சி அடையச் செய்திட வேண்டும் என்ற அரசின் நோக்கத்திற்கேற்ப ஆதி திராவிடர் மாணாக்கரை கல்வி கற்க ஊக்கப்படுத்தும் வகையிலும் அவர்கள் கல்விக்கு உறுதுணையாக விளங்கி அம்மாணவர்கள் உயர் கல்வியில் மேம்பாடு அடையச் செய்யும் வகையிலும், இத்துறை பல்வேறு கல்வி உதவித் தொகை மற்றும் கட்டணச் சலுகைத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### (அ) போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்

பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புகளில் கல்வி பயிலும் மாணாக்கர் தமது கல்வியை பொருளாதாரத் தடையின்றித் தொடரவும், உயர்கல்வியில் ஆதி திராவிடர் மாணாக்கரின் மொத்த சேர்க்கை விகிதத்தை

உயர்த்திடும் நோக்குடனும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினை செயல்படுத்த ஏற்படும் செலவினத் தொகை 60:40 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற ஆதி திராவிட மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளில் கல்வி பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு கல்விக் கட்டணங்கள் மற்றும் கல்விப்படி (Academic allowances) ஆகியவை கல்வி உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகிறது.

**(i) கல்விக் கட்டணங்கள்**

அரசு/அரசு உதவி பெறும் கல்வி நிலையங்கள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் அரசு / நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு, அரசு/அரசால் நியமிக்கப்பட்ட கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்படும் கட்டாய மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டணங்கள் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

**(ii) கல்விப்படி (Academic Allowance)**

போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் கல்வி சார்ந்த செலவினங்களுக்காக கீழ்க்கண்ட அட்டவணைப்படி படிப்பு வாரியாக கல்விப் படியும் வழங்கப்படுகிறது.

| தொகுதி | படிப்புகள் | ஒரு வருடத்திற்கான கல்விப்படி (ரூ.) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் (Hosteller) | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| I | பொறியியல், மருத்துவம், சட்டம், நவீன ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பம் (Fashion Technology), கால்நடை, வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த தொழிற்படிப்புகளில் பட்டம் மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு, மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு படிப்புகளில் முதுநிலை பட்டயம் / பட்டயக் கணக்கர் (CA/ICWA/CS/CFA etc.,) மற்றும் முதுநிலை ஆராய்ச்சி மற்றும் முனைவர் பட்டப்படிப்பு (M.Phil, Ph.D., & Post Doctoral programmes) | 13,500/– | 7,000/– |
| II | 12 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாக கொண்ட மருந்தாக்கியல், செவிலியர், விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஹோட்டல் மேலாண்மை போன்ற தொழிற்படிப்புகளில் பட்டம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் (B.Sc.,(Nursing), B.Pharm, B.O.T, B.P.T, M.Sc (Nursing),M.Pharm, M.P.T, etc., ) | 9,500/– | 6,500/– |

| | | | |
|---|---|---|---|
| III | தொகுதி I மற்றும் II–ல் இடம் பெறாத இதர இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டப்படிப்புகள் (B.A./ B.Sc./ B.Com./ M.A.,/ M.Sc./ M.Com., etc., ) | 6,000/– | 3,000/– |
| IV | 10–ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட தொழில் நுட்பப் பட்டயப் படிப்புகள், சான்றிதழ் படிப்புகள், மேல்நிலைக் கல்வி படிப்புகள் மற்றும் தொழிற்பயிற்சி படிப்புகள். (XI, XII, ITI, தொழிற்பயிற்சிக் கல்வி etc.,) | 4,000/– | 2,500/– |

மொத்த கல்வி உதவித் தொகையில் 60 விழுக்காடு ஒன்றிய அரசு பங்குத் தொகை மாணவர்களுக்கு நேரடியாக விடுவிக்கப்படும் நிலையில் 2023–2024–ஆம் நிதியாண்டில் 40 விழுக்காடு மாநில அரசு பங்குத் தொகையை விடுவிக்கும் பொருட்டு இத்திட்டத்திற்கென, ரூ.559.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் வகுக்கப்பட்டுள்ள

விதிமுறைகளால் உதவித்தொகை பெற இயலாத ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ ஆதி திராவிடர் மாணாக்கருக்கு உதவிடும் பொருட்டு மாநில அரசால் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திலும் கல்வி உதவித்தொகை மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். மேலும் மாணாக்கரின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்களது அகவிலைப்படி நீக்கி வருமானம் கணக்கிடப்பட வேண்டும்.

இத்திட்டத்திற்கென 2023-2024-ஆம் நிதியாண்டில், ரூ.80.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (இ) மாநில அரசின் உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை திட்டம்

அரசு விடுதிகள் அல்லாத கட்டண விடுதிகளில் தங்கி அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் உயர்கல்வி பயிலும் ஆதி திராவிட மற்றும் கிறித்துவ ஆதி திராவிடர் மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் அவர்களது விடுதி செலவினை ஈடுசெய்ய சிறப்பு உதவித்தொகை கீழ்க்கண்டவாறு வரவு வைக்கப்படுகிறது.

| வ. எண். | படிப்புகள் | உதவித் தொகை (ஒரு ஆண்டுக்கு) |
|---|---|---|
| 1 | கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்புகள் மற்றும் பல்தொழில்நுட்ப பட்டயப் படிப்புகள் | ரூ.7,500/– |
| 2 | தொழிற்படிப்புகள் மற்றும் கலை, அறிவியல் பட்ட மேற்படிப்புகள் | ரூ.8,000/– |

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்திற்கென, 2023-2024-ஆம் நிதியாண்டில், ரூ.8.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஈ) வெளிநாடுகளில் முதுகலைப்பட்டம் மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை பயில்வோருக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம்

ஆதி திராவிடர், கிறித்துவ ஆதி திராவிடர் மாணாக்கரை வெளிநாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களில் முதுகலைப் பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட முனைவர் ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்ள ஊக்குவிக்கும் வகையில், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இக்கல்வி உதவித்தொகையை பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.8.00 இலட்சமாக 2022-2023-ஆம் ஆண்டு முதல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 10 மாணாக்கர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் பயிலக்கூடிய நாடு மற்றும் பயிலும் படிப்பினடிப்படையில் ஒரு மாணவருக்கு ஆண்டிற்கு ரூ.36.00 இலட்சத்திற்கு மிகாமல் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

கல்வி நிறுவனங்களுக்கான உலகளாவிய தரவரிசைப் பட்டியலில் **Quacquarelli Symonds** (QS) எனும் தர நிர்ணய அமைப்பால் தரப்படுத்தப்படும் முதல் 1000 கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறும் மாணவர்களுக்கு இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும் ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டுமே இத்திட்டத்தின்கீழ் பயன்பெற இயலும்.

திருத்தி அமைக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் இதுவரை 18 மாணவர்கள் வெளிநாடுகளில் சென்று கல்வி பயில உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வெளிநாடுகளின் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறத் தேவையான TOEFL/ IELTS/ GRE / GMAT ஆகிய தகுதித் தேர்வுகளில் தேர்ச்சிபெறச் செய்ய, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் மூலம் பயிற்சி வழங்கப்படுகிறது.

2023–2024–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவற்காக **ரூ.5.57 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (உ) முழு நேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கான ஊக்கத்தொகை

அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களில் முழுநேர முனைவர் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ளும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதி திராவிடர் மாணாக்கருக்கு இந்த ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல், சட்டம் ஆகிய பிரிவுகளில் ஆய்வுகளில் ஈடுபடும்

மாணாக்கரை பொருளாதார ரீதியாக ஊக்குவிக்கும் வகையில் இக்கல்வி உதவித் தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், இதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.8.00 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின் கீழ் தகுதி பெறும் 1,600 மாணாக்கருக்கு தலா ரூ.1,00,000/- வீதம் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2022-2023-ஆம் நிதியாண்டில் 1,554 ஆராய்ச்சி மாணாக்கருக்கு ரூ.15.54 கோடி ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டில் **ரூ.16.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஊ) ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்**

2021-2022- ஆம் நிதியாண்டு முதல், ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர் மாணாக்கருக்கான ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்

தொகைத் திட்டம் மற்றும் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சுகாதாரத் தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்திற்கான மொத்த செலவினம் ஒன்றிய, மாநில அரசுகளால் முறையே 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

**திட்டக்கூறு –1**

**ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் மாணாக்கருக்கான ப்ரி மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம்**

அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அல்லது ஒன்றிய / மாநில கல்வி நிலையங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இம்மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரது

ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**திட்டக்கூறு –2**

**தூய்மைப்பணி மற்றும் சுகாதாரக்கேடு விளைவிக்கும் பணிகளில் பணிபுரிவோரின் குழந்தைகளுக்கான ப்ரி மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம்**

தூய்மைப் பணி, தோல் பதனிடுதல், தோல் உரித்தல் மற்றும் கழிவுப் பொருட்களிலிருந்து மறுசுழற்சிக்கு உகந்த பொருட்களை பிரித்து சேகரித்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளோருக்கு சுகாதாரக்கேடு ஏற்பட வாய்ப்புள்ளதால் அத்தகைய பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு, சாதி, மத வேறுபாடு மற்றும் வருமான வரம்பின்றி இக்கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

1–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரையிலான படிப்புகளை அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் பயிலும் மாணாக்கர் இக்கல்வி உதவித் தொகை பெற தகுதி பெறுவர்.

ப்ரி மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் பின்வரும் வீதத்தில் மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் கல்வி உதவித் தொகை வரவு வைக்கப்படுகிறது.

| திட்டக் கூறு | வெளி மாணாக்கர் (Day Scholar) | விடுதி மாணாக்கர் (Hosteller) |
|---|---|---|
| | ( ஒரு ஆண்டுக்கு) (ரூபாய்) | |
| திட்டக்கூறு –1 | 3,500/– (வகுப்பு 9–10) | 7,000/– (வகுப்பு 9–10) |
| திட்டக்கூறு –2 | 3,500/– (வகுப்பு 1–10) | 8,000/– (வகுப்பு 3–10) |

இத்திட்டத்திற்காக, 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.53.73 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1 .3 கல்விக் கட்டணச் சலுகைகள்

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ ஆதி திராவிடர் மாணாக்கர் அனைவருக்கும், வருமான உச்ச வரம்பின்றி, பின்வரும் கல்விக் கட்டணச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(அ) கல்லூரி மாணாக்கருக்கான கற்பிப்புக் கட்டணச் சலுகை

(ஆ) பட்டப் படிப்பு பயிலும் மாணாக்கருக்கான சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகை

(இ) முதுகலை பட்டப் படிப்பு பயிலும் மாணவியருக்கு சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகை

(ஈ) கல்லூரி மாணாக்கருக்கான விண்ணப்பக் கட்டண விலக்கு

(உ) பள்ளி மாணாக்கருக்கு சிறப்புக் கட்டணச் சலுகை

(ஊ) பத்து, பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணாக்கருக்கான பொதுத் தேர்வுக் கட்டண விலக்கு.

மேற்காணும் திட்டங்களுக்காக 2023–2024–ஆம் நிதியாண்டில், ரூ.14.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.4 பெண் கல்வி சிறப்பு ஊக்கத்தொகைத் திட்டம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மாணவியர் இடைநிற்றலின்றி

தமது படிப்பைத் தொடர்வதை ஊக்குவிக்கும் வகையிலும், மாணவியர் 100 விழுக்காடு பள்ளியில் சேர்வதை உறுதி செய்வதற்கும் பெண் குழந்தைகளுக்கு ஊக்கத்தொகை வழங்கும் இச்சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் மாணவியருக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகை குறித்த விவரங்கள் பின்வருமாறு:

| வகுப்பு | தொகை (ஆண்டொன்றுக்கு) (ரூபாயில்) |
|---|---|
| 3 முதல் 5 வரை | 500/- |
| 6 | 1,000/- |
| 7 மற்றும் 8 | 1,500/- |

இத்திட்டத்தின் கீழ் 2022-2023-ஆம் நிதியாண்டில், 4,52,043 மாணவியருக்கு ரூ.43.44 கோடி மதிப்பிலான ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென, 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.45.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.5 பரிசுத் தொகைத் திட்டம்

இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற்படிப்பு ஆகிய உயர்கல்வி படிப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிபெறும் மாணாக்கரை ஊக்குவிக்கும் விதமாக, இப்பரிசுத்தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி 60 விழுக்காட்டுக்கு மேல் மதிப்பெண் பெறும் முதல் 1000 ஆதி திராவிடர், கிறித்துவ ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு பரிசுத் தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| படிப்பு | பரிசுத் தொகை (ஒருவருக்கு) (ரூபாயில்) | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|
| இளங்கலை | 3,000/- | 500 |
| முதுகலை | 5,000/- | 300 |
| தொழிற்படிப்பு | 6,000/- | 200 |

இத்திட்டத்திற்கென 2023-2024-ஆம் நிதியாண்டில், **ரூ.4200 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.6 பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் 1 முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் ஆதி திராவிடர், கிறித்துவ ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களது பொருளாதார சுமையினைக் குறைத்திடும் வகையில் பாடப்புத்தகங்களும், 1 முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு குறிப்பேடுகளும் பள்ளிக்கல்வித் துறை மூலமாக வழங்கப்படுகின்றன.

2022–2023–ஆம் நிதியாண்டில், ரூ.94.02 இலட்சம் செலவில் 10–ஆம் வகுப்பில் பயிலும் 17,316 மாணாக்கருக்கும் மற்றும் 12–ஆம் வகுப்பில் பயிலும் 16,576 மாணாக்கருக்கும் சிறப்பு வழிகாட்டி கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2023–2024–ஆம் நிதியாண்டில் **ரூ.1.50 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.7 சீருடைகள் வழங்குதல்

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு பள்ளிக்கல்வித்துறை மூலமும், 9–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணாக்கருக்கு நான்கு இணை சீருடைகள் சமூக நலத்துறையின் கீழ் இயங்கும் மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தாட்கோ மூலமாகவும் தைத்து வழங்கப்படுகின்றன.

2022–2023–ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.12.95 கோடி செலவில் 36,782 மாணவர்களுக்கும் மற்றும் 24,290 மாணவியருக்கும் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென, 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.10.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.8 பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல்

வேலை வாய்ப்புக்கான சந்தையில் தற்போது நிலவும் போட்டிச் சூழலில் பள்ளி / கல்லூரிகளில்

கற்பிக்கப்படும் பாடங்களுடன் கூடுதலாக மாணாக்கர் தமது பொது அறிவுத் திறனை வளர்த்துக் கொள்வது அவசியமாகும். மாணாக்கரின் பொது அறிவுத் திறனை மேம்படுத்தவும், அவர்கள் குடிமைப்பணித் தேர்வுகள் உள்ளிட்ட இதர போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள தயாராகும் வகையிலும், இத்துறையால் நடத்தப்படும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் பின்வருமாறு ஆண்டுதோறும் வாங்கி வழங்கப்படுகின்றன.

| **வ. எண்** | **பள்ளிகள் / விடுதிகள்** | **நூலக புத்தகங்கள் / பருவ இதழ்கள் ( ஆண்டுக்கு) (ரூபாயில்)** |
|---|---|---|
| 1. | உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் | 1,450/- |
| 2. | பள்ளி விடுதிகள் | 2,070/- |
| 3. | கல்லூரி விடுதிகள் | 7,997/- |

விடுதிகளுக்கு செய்தித்தாள்கள் (2 தமிழ் மற்றும் 1 ஆங்கில நாளிதழ்), மாத இதழ்களான காம்படிசன்

சக்ஸஸ் ரிவ்யூ, திட்டம், யோஜனா, குருஷேத்ரா, வார இதழ்களான வேலைவாய்ப்பு செய்திகள், இந்தியா டுடே மற்றும் வருட புத்தகங்களான இந்தியா இயர் புத்தகம், மனோரமா இயர் புத்தகம் ஆகியவை வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2022–2023–ஆம் நிதியாண்டில், ரூ.11.17 இலட்சம் மதிப்பிலான புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.13.74 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1 .9 மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

ஆதி திராவிடர், கிறித்துவ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணக்கர் குறித்த நேரத்தில் பள்ளிக்குச் செல்ல உதவிடும் நோக்குடன் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக உதவி பெறும் மேல்நிலைப்

பள்ளிகளில் 11–ஆம் வகுப்பு படிக்கும் அனைத்து மாணாக்கருக்கும் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.103.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1 .10 விடுதிகள்

தொலைதூர கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மாணாக்கர் கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்களில் போதிய அளவு விடுதி வசதிகள் கிடைக்காததால், தங்கள் படிப்பை நிறுத்தும் நிலையினை மாற்றி தமது கல்வியினை தொடர்ந்திடும் வகையில், அவர்கள் படிக்கும் கல்வி நிறுவனங்களுக்கு அருகில் இத்துறையால் ஆதி திராவிடர் நல விடுதிகள் நடத்தப்படுகின்றன.

இத்துறையின் கீழ் இயங்கி வரும் ஆதி திராவிடர் நல விடுதிகளும் அவற்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணாக்கரின் எண்ணிக்கையும் பின்வருமாறு:–

## ஆதி திராவிடர் நல விடுதிகளின் விவரம் (2022-2023)

| விடுதியின் வகை | விடுதிகளின் எண்ணிக்கை | | | மாணாக்கரின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| பள்ளி விடுதிகள் | 738 | 403 | 1,141 | 53,881 | 28,530 | 82,411 |
| கல்லூரி விடுதிகள் | 71 | 81 | 152 | 7,881 | 5,849 | 13,730 |
| ஐ.டி.ஐ. விடுதிகள் | 16 | 2 | 18 | 1,356 | 116 | 1,472 |
| பாலிடெக்னிக் விடுதிகள் | 3 | 2 | 5 | 178 | 110 | 288 |
| முதுகலைப் பட்டதாரி கல்லூரி விடுதிகள் | 9 | 6 | 15 | 693 | 315 | 1,008 |
| மொத்தம் | **837** | **494** | **1,331** | **63,989** | **34,920** | **98,909** |

- தமிழ்நாடு கேரள எல்லையோரப் பகுதிகளில் உள்ள காபி / தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட தமிழர்களின் குழந்தைகள் தங்கிக் கல்வி பயில ஏதுவாக தேனி மாவட்டத்தில் உள்ள

16 விடுதிகளில் தலா 10 இடங்கள் (160 மொத்த இடங்கள்) கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு விடுதியிலும் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகள் தங்கிக் கல்வி பயில ஏதுவாக 5 கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**புதிய முன்னெடுப்புகள்–2022–2023**

- எம்.சி.இராஜா கல்லூரி விடுதி வளாகத்தில் ரூ.44.50 கோடி மதிப்பீட்டில் 10 தளங்களுடன் நவீன வசதிகளுடன் புதிய விடுதிக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ரூ.25.00 கோடி மதிப்பில் 366 விடுதிக் கட்டடங்கள் சிறப்பு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மறுசீரமைக்கப் பட்டுள்ளன.
- கல்லூரி மாணாக்கருக்கான விடுதிகளின் தேவையினை கருத்தில் கொண்டு 2022–2023–ஆம் நிதியாண்டில் புதிதாக மூன்று ஆதி திராவிடர் நல

கல்லூரி மாணாக்கர் விடுதிகள் ரூ.21.97 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ளன.

- ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளுக்கு ரூ.5.70 கோடி செலவில் கூடுதல் கழிவறைகள் மற்றும் குளியலறைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- 60 ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் / சுற்றுச்சுவர் உயரப்படுத்தும் பணிகளுக்கு ரூ.3.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- விடுதி மாணாக்கருக்கு ஆண்டுக்கு மூன்று முறை மருத்துவப் பரிசோதனை முகாம்கள் நடத்தப்படுகின்றன.

- விடுதிகளில் பயிலும் மாணவியர் மற்றும் அவர்தம் தாயாருக்கு மருத்துவ ஆலோசனை மற்றும் நல்வழி வகுப்புகள் ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படுகின்றன.

- 25 கல்லூரி விடுதிகளுக்கு நூலகங்களும், மேலும் 23 கல்லூரி விடுதிகளில் இணைய வழி நூலகங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- கல்லூரி விடுதிகளில் பயிலும் மாணாக்கருக்கு அவர்களின் மொழி, ஆளுமைத்திறன் மற்றும் வேலைவாய்ப்பு பெறும் தகுதியினை ஏற்படுத்தும் வகையில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

**அ. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள்**

(i) கல்லூரி விடுதிகளுக்கு இரண்டு அடுக்கு படுக்கை வசதி கொண்ட கட்டில்கள், ஜமுக்காளம், பாய், போர்வை, உறையுடன் கூடிய தலையணைகள், எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர். மருந்துகள் அடங்கிய முதலுதவிப் பெட்டி, விளையாட்டு உபகரணங்கள்

(ii) சமையல் எரிவாயு இணைப்பு, குடிநீர் சுத்திகரிப்புக் கருவிகள், ஈர அரவை

இயந்திரங்கள், நீராவி கொதிகலன்கள், மின்னணு எடை இயந்திரங்கள், மின் அரைப்பான்கள்

(iii) ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சலவை இயந்திரங்கள் மற்றும் சுகாதாரக் குட்டைத் தகளிகள்.

iv) நூலக வசதி.

**ஆ. உணவு மற்றும் சில்லரைச் செலவினங்கள்**

ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணாக்கருக்கு உணவுக் கட்டணம், விழா நாட்களுக்கான சிறப்பு உணவுக் கட்டணம் மற்றும் சில்லரைச் செலவினங்களுக்கான கட்டணம் ஆகியவை பின்வருமாறு வழங்கப்பட்டு வருகின்றன.

| கட்டணங்கள் | பள்ளி விடுதி மாணாக்கர் | கல்லூரி விடுதி மாணாக்கர் |
|---|---|---|
| உணவுக் கட்டணம் (ஒரு மாதத்திற்கு) | ரூ.1,000/– | ரூ.1,100/– |
| சில்லரைச் செலவினம் (சோப்பு, எண்ணெய், சிகைக்காய் வாங்குதல் மற்றும் முடி வெட்டுதல்) (ஒரு மாதத்திற்கு) | ரூ.100/– | ரூ.150/– |
| சிறப்பு உணவுக் கட்டணம் (பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப் பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி விழா நாட்களில்) | ரூ.40/– | ரூ.80/– |

## இ. தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

### (i) விடுதிகள்

ஆதி திராவிடர் குழந்தைகளுக்கு கல்வி அளிப்பதில் அரசுடன் இணைந்து சேவை செய்து வரும் 16 தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும்

18 விடுதிகளில் தங்கிப்பயிலும் 4,432 ஆதி திராவிட மாணாக்கருக்கு இத்துறை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படுவது போலவே, உணவுக் கட்டணம், பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் இத்துறை மூலம் வழங்கப்படுகின்றன.

**(ii) பள்ளியுடன் இணைந்த விடுதிகள்**

ஆதி திராவிடர் மாணாக்கருக்காக தூத்துக்குடி மாவட்டம், முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளை, பள்ளி ஒன்றை நடத்தி வருகிறது. இப்பள்ளியில் 3,500 மாணாக்கர் பயின்று வருகின்றனர். மேலும், 2 விடுதிகள் இந்த அறக்கட்டளையால் நடத்தப்பட்டு வருகின்றன. இங்கு பணிபுரியும் 160 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஊதியம் அரசால் மானியமாக 2006 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென, 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.12.29 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.11 அரசு ஆதி திராவிடர் தொழிற்பயிற்சி நிலையங்கள்

தொழிற்பயிற்சி பயில விரும்பும் ஆதி திராவிடர் மாணாக்கரின் நலனுக்காக பின்வரும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் பிரத்தியேகமாக செயல்பட்டு வருகின்றன.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொழிற் பயிற்சி நிலையம் அமைந்துள்ள இடம் | மாணாக்கரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கடலூர் | சிதம்பரம் | 252 |
| 2. | திருவள்ளூர் | வடகரை | 188 |
| **மொத்தம்** | | | **440** |

## 2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

சொந்தமாக வீடுகள் இல்லாத ஆதி திராவிடர் மக்களுக்கு அவர்களுடைய சமூக, பொருளாதார நிலையினை அடிப்படையாகக் கொண்டு இலவச

வீட்டுமனை வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

தற்போது நில மதிப்பு மிகவும் அதிகமாகி விட்ட நிலையில் தேவைக்கேற்ப தனிநபர் பேச்சுவார்த்தையின் மூலமாகவும் மற்றும் நடைமுறையிலுள்ள நில எடுப்பு சட்டங்களின்படியும் நிலம் கையகம் செய்து உரிய பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு இலவசமாக வீட்டு மனைப்பட்டாக்கள் பின்வருமாறு வழங்கப்பட்டு வருகின்றன.

| பகுதி | நிலத்தின் பரப்பளவு | பயனாளியின் ஆண்டு வருமான வரம்பு |
|---|---|---|
| கிராமப்புறம் | 3 சென்ட் | ரூ.72,000/- |
| நகராட்சி | 1 ½ சென்ட் | |
| மாநகராட்சி | 1 சென்ட் | |

இதுவரையில் இலவச வீட்டுமனைப்பட்டா பெற்ற 1,66,504 பயனாளிகளுள் முதற்கட்டமாக 1,32,609 பயனாளிகளுக்கு 2022-2023-ஆம் நிதியாண்டில்

தமிழ் நிலம் இணைய தளம் மூலமாக இணையவழி பட்டாக்கள் (e–patta) வழங்கப்பட்டுள்ளன.

மேலும், ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் கையகம் செய்யப்பட்டு, ஏற்கனவே இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டு காலியாக இருந்த மனைகளில் 24,081 பயனாளிகளுக்கு இணைய வழி பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2023–2024–ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.6.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3. மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி

ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளில் மயானம் மற்றும் மயானத்திற்கான இணைப்புச் சாலை வசதிகளை ஏற்படுத்துவதற்காக நிலம் கையகம் செய்தல் மற்றும் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தரும் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கென 2023–2024–ஆம் நிதியாண்டில் **ரூ.74.91 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4. சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்பாட்டில் கொண்டிருக்கும் கிராமங்களுக்கு பரிசுத் தொகை வழங்குதல்.

சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்பாட்டில் கொண்டிருக்கும் முன்மாதிரி சிற்றூர்களில், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ஊக்கத் தொகையாக தலா ரூ.10.00 இலட்சம் பரிசு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022–2023–ஆம் நிதியாண்டில் 70 சிற்றூர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளன.

இத்திட்டத்திற்கென 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.8.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.100.00 கோடி செலவில் அடிப்படை

கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படுகின்றன. நகர்ப்புரப் பகுதிகளிலும், ஊரகப்பகுதிகளிலும் ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை உறுதி செய்து, முழுமையான சமூக பொருளாதர வளர்ச்சியை ஏற்படுத்த "**அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்**" 2023-2024-ஆம் நிதியாண்டு முதல் ஐந்தாண்டுகளில் 1,000 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.

வன்கொடுமை நிகழும் கிராமங்கள் என காவல் துறை இயக்குநர் மூலமாக கண்டறியப்பட்ட கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட இத்திட்டத்தின் கீழ் முன்னுரிமை அளிக்கப்பட்டு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கென 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.200.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. ஈமச்சடங்கு உதவித்தொகை

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவர்களின் குடும்பங்களில் நிகழும் துக்க நிகழ்வுகளுக்கு ஈமச்சடங்கு உள்ளிட்ட எதிர்பாராச் செலவுகளை மேற்கொள்ள ரூ.5,000/– நிதியுதவி வழங்கப்படுகிறது.

2022–2023–ஆம் நிதியாண்டில், ரூ.9.81 கோடி மதிப்பிலான இவ்வுதவித்தொகை 19,900 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.**9.95** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. பிரதம மந்திரியின் ஆதி திராவிட மக்கள் முன்னேற்றத் திட்டம் (Pradhan Mantri – Anusuchit Jaati Abhyuday Yojana – PM–AJAY)

பிரதம மந்திரியின் முன்னோடி கிராமத் திட்டம் (Pradhan Mantri Adarsh Gram Yojana–PMAGY), ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம் (Special Central Assistance to

Scheduled Castes Sub Plan – SCA to SCSP) மற்றும் பாபு ஜெகஜீவன்ராம் விடுதி கட்டும் திட்டம் (Babu Jagjivan Ram Chatrawaas Yojana–BJRCY) ஆகிய மூன்று திட்டங்களை ஒருங்கிணைத்து பிரதம மந்திரியின் ஆதி திராவிட மக்கள் முன்னேற்றத் திட்டம் (Pradhan Mantri – Anusuchit Jaati Abhyuday Yojana – PMAJAY) எனும் புதிய திட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது .

2022–2023–ஆம் நிதியாண்டில் 1,123 கிராமங்கள் பிரதம மந்திரி கிராம முன்னோடித் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

40 சதவீதத்திற்கு மேல் ஆதி திராவிடர் மக்கள் வசிக்கும் பகுதிகளில், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்வதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

**8. சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையை சரிபார்த்தல்**

உண்மையான ஆதி திராவிட மக்களின் சட்டப்பூர்வமான உரிமைகளை காத்திடும் பொருட்டு ஆதி திராவிடர் சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர் | தலைவர் | ஆதி திராவிடர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை |
| 2. | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் | உறுப்பினர்–செயலர் | |

| | | | |
|---|---|---|---|
| 3. | மானுடவியல் வல்லுநர் | உறுப்பினர் | ஏற்கவில்லையெனில் இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 226–ன்படி உயர் நீதிமன்றத்திலும், சட்டக்கூறு 136–ன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம். |

## 8. 1955–ஆம் ஆண்டு குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015

தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளித்திட வழி வகுக்கும் குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015, வன்கொடுமைகள் தடுப்பு விதிகள், 1995 மற்றும் திருத்த விதிகள், 2016

மற்றும் 2018 ஆகிய சட்டங்கள் இந்திய அரசால் இயற்றப்பட்டு, அவை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநில அளவில் காவல்நிலையங்களில் இச்சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை, ஒரு காவல்துறை இயக்குநர், காவல்துறை உதவித் தலைவர் மற்றும் மாவட்ட அளவில் 31 காவல் துணை கண்காணிப்பாளர்கள் மற்றும் 7 காவல் உதவி ஆணையர்கள் மேற்பார்வையில் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுகள் கண்காணித்து வருகின்றன.

**(அ) தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக நடைபெறும் குற்றங்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தீருதவிகள் மற்றும் மறுவாழ்வு தொடர்பான வழக்குகளை விரைந்து முடிக்க ஏதுவாக திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம், சிவகங்கை, திண்டுக்கல், இராமநாதபுரம்,

விருதுநகர் (ஸ்ரீவில்லிபுத்தூர்), புதுக்கோட்டை, கடலூர், நாமக்கல், தேனி, திருவண்ணாமலை, பெரம்பலூர், வேலூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி (நாகர்கோவில்), செங்கல்பட்டு, திருப்பூர், திருவாரூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 22 தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் நிலுவையில் உள்ள சேலம், கிருஷ்ணகிரி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கூடுதலாக நான்கு புதிய தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முதற்கட்டமாக, சேலத்தில் ஒரு புதிய தனியுறு சிறப்பு நீதிமன்றம் தொடங்கப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் இவ்வழக்குகளை விசாரணை செய்ய தற்போதுள்ள குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2022–2023–ஆம் ஆண்டு முதல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

வழக்கின் தன்மைக்கேற்றவாறு தற்போது வழங்கப்பட்டு வரும் குறைந்தபட்சத் தீருதவித் தொகை ரூ.85,000/– லிருந்து ரூ.1,00,000/– ஆகவும், அதிகபட்சம் ரூ.8,25,000/– லிருந்து ரூ.12,00,000/– ஆகவும் மாநில அரசின் நிதியிலிருந்து உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

2022–2023–ஆம் நிதியாண்டில், 3,870 நபர்களுக்கு தீருதவித் தொகை, கருணைத் தொகை மற்றும் ஓய்வூதியத்திற்காக ரூ.47.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2023–2024–ஆம் நிதியாண்டில், இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூ.60.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்**

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பொது மக்களிடையே தீண்டாமைக்கெதிரான விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 24–ஆம் தேதி முதல் 30–ஆம் தேதி

வரை "மனிதநேய வார விழா" நடத்தப்படுகிறது. இவ்விழாவினை நடத்துவதற்காக மாவட்டங்களுக்கு தலா ரூ.50,000/- மற்றும் மாநில அளவில் ரூ.1,00,000/- நிதி வழங்கப்படுகிறது.

ஆண்டுதோறும் ஜனவரி 26, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களிலும், அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களிலும் சமத்துவ விருந்து ஏற்பாடு செய்யப்படுகிறது. சமத்துவ விருந்து ஏற்பாடு செய்வதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் ஈடுபடுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2022-2023-ஆம் நிதியாண்டில், ரூ.24.07 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2023-2024-ஆம் நிதியாண்டில் **ரூ.25.37 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) சமூக நல்லிணக்கத்துடன் திகழும் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்**

தீண்டாமை கடைபிடிக்கப்படாமல் பொது மக்கள் அனைவரும் நல்லிணக்கத்துடன் வாழும் கிராமங்கள் தமிழ்நாட்டின், அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை தவிர்த்து) தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திடும் பொருட்டு ரூ.10.00 இலட்சம் நிதி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2022–2023–ஆம் நிதியாண்டில், ரூ.3.70 கோடி செலவில் 37 மாவட்டங்களில் உள்ள 37 கிராமங்கள் பயனடைந்துள்ளன.

இத்திட்டத்திற்கென 2023–2024–ஆம் நிதியாண்டில், **ரூ.3.70 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. தமிழ்நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினச் சமூகங்கள் தொடர்பான கலை, பண்பாடு, இலக்கிய படைப்புகளை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் செயல்பட்டு வருகிறது.

இப்பணிக்கான தனி பணிக்குழு நிதியாக (Corpus Fund) ரூ.50.00 இலட்சம் வழங்கப்பட்டு வைப்புத் தொகை கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பெறப்படும் வட்டித்தொகை கதை, கட்டுரை, கவிதை, வரலாறு மற்றும் புதினம் ஆகியவற்றில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் சிறந்த எழுத்தாளர்களுக்கு பரிசுத் தொகை வழங்க பயன்படுத்தப்படுகிறது.

ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த 9 எழுத்தாளர்கள், ஆதி திராவிடர் பிரச்சனைகளைப் பற்றி எழுதும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் அல்லாத ஒரு எழுத்தாளர்

மற்றும் பழங்குடியினர் பற்றி எழுதும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத ஒரு எழுத்தாளர் என மொத்தம் 11 எழுத்தாளர்களுக்கு ரூ.1,00,000/- அல்லது தெரிவு செய்யப்பட்ட நூல்களை வெளியிட ஆகும் செலவு இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதி உதவியாக 2022-2023-ஆம் நிதியாண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

**11. டாக்டர் அம்பேத்கர் விருது**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக தொண்டாற்றி வரும் நபருக்கு தமிழ்நாடு அரசால் 1998 ஆம் ஆண்டு முதல் 2021-ஆம் ஆண்டு வரை 24 நபர்களுக்கு டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கப்பட்டது.

ஆண்டுதோறும் திருவள்ளுவர் தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் டாக்டர்.அம்பேத்கர் விருது வழங்கப்படுகிறது. தற்போது, இவ்விருதுடன் பரிசுத் தொகையாக

ரூ.5,00,000/−க்கான காசோலை, தகுதியுரை மற்றும் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

2022−ஆம் ஆண்டிற்கான "டாக்டர் அம்பேத்கர் விருது" திரு. எஸ்.வி. ராஜதுரை அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவர் 85க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவர் புரட்சிகரமான கருத்துக்களை தனது நூல்களில் வெளிக்கொணர்ந்துள்ளார். இவர் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பெரியார் உயர் ஆய்வு மையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டு பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

## II. பழங்குடியினர் நலன்

தமிழ்நாட்டில் 2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 37 வகையான உட்பிரிவுகளைச் சார்ந்த 8,41,558 பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.17 விழுக்காடு ஆகும்.

தமிழ்நாட்டில், சேலம், திருவண்ணாமலை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், இராணிப்பேட்டை, தருமபுரி, நாமக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நீலகிரி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கடலூர், மதுரை, அரியலூர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் சென்னை ஆகிய 23 மாவட்டங்களில் பழங்குடியின மக்கள் அதிகம் வசித்து வருகின்றனர்.

பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் விதமாக தகுந்த வேலைவாய்ப்பினை அமைத்து தருவதன் மூலம் தனிநபர் பொருளாதார

நிலையை உயர்த்துதல், குறைந்த கல்வியறிவிற்கான காரணிகளை இனம் கண்டு கல்வித் தரத்தினை உயர்த்துதல், தகுந்த திட்டங்கள் மூலம் ஊட்டச்சத்து தொடர்பான குறைபாடுகளை களைதல், சுகாதார அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை சூழலை உருவாக்குதல், பழங்குடியின மக்களின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டுக் கூறுகளை சரியாக புரிந்துகொண்டு அதனை பாதுகாத்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பழங்குடியினர் நல இயக்குநரகம் 2000 – ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தோற்றுவிக்கப்பட்டு முழுநிதி அதிகாரத்துடன் கூடிய தனித்துறையாக 2018–ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

## 1. கல்வி

கல்வியினால் ஏற்படும் வளர்ச்சி மட்டுமே எதிர்கால சந்ததியினருக்கு நீடித்த, நிலைத்த சமூக பொருளாதார மேம்பாட்டினை அளிக்கும் என்பதால்

பழங்குடியின மாணாக்கரின் கல்வி தொடர்பான திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

மாணாக்கரின் கல்வியறிவினை உயர்த்தும் விதமாக பள்ளிக்கல்வி முதல் உயர்கல்வி வரை பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினர் நலத்துறை நிதி ஒதுக்கீட்டில் 54.66 சதவீதம் கல்விக்காக செலவிடப்படுகிறது.

**(அ) பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள்**

பழங்குடியின மக்களுக்கு தரமான பள்ளிக் கல்வியை அளிக்கும் பொருட்டு இத்துறை தொடக்க கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை பள்ளிகளை நடத்தி வருகிறது. பள்ளிகள் வாழ்விடங்களுக்கு அருகாமையில் அமைப்பதன் மூலம் இடைநிற்றலை முற்றிலும் தவிர்த்து, கல்வி அறிவு விகிதத்தினை அதிகரிக்கலாம் என்பதின் அடிப்படையில் குடியிருப்புகளுக்கு அருகாமையில் உணவு மற்றும்

தங்கும் வசதிகளுடன் கூடிய பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை நடத்தி வருகிறது.

**அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம் (2022–2023)**

| பள்ளிகள் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 212 | 5,045 | 4,633 | 9,678 |
| நடுநிலைப் பள்ளிகள் | 49 | 2,187 | 2,062 | 4,249 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 31 | 2,200 | 1,811 | 4,011 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 28 | 4,829 | 4,401 | 9,230 |
| மொத்தம் | 320 | 14,261 | 12,907 | 27,168 |

**புதிய முன்னெடுப்புகள் (2022 – 2023)**

- 131 பழங்குடியின உண்டி உறைவிடத் தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் ரூ.4.64 கோடி செலவில் ஆங்கில மொழித்திறன் பயிற்சி கரடிபாத் நிறுவனம் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது.

- 39 பள்ளிகளில் ரூ.20.20 கோடி மதிப்பீட்டில் 65 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் 34 பள்ளிகளில் சுற்றுச் சுவர்கள் கட்டுதல்.
- 88 பள்ளிகளில் ரூ.9.24 கோடி செலவில் வைப்பறையுடன் கூடிய நவீன சமையலறைகள் கட்டுதல்.
- 3 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிகள் ரூ.7.00 கோடி செலவில் அறிவுத் திறன் வகுப்பறைகள், உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் (High Tech Lab), ஆங்கில மொழிப்பயிற்சி மற்றும் உயர்கல்வி சேர்க்கைக்கான பல்வேறு நுழைவுத் தேர்வுகளுக்கான பயிற்சிகளை வழங்கிடும் விதத்தில் மாதிரிப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.
- 31 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் ஒரு வனத்துறைப் பள்ளியில்

ரூ.4.85 கோடி செலவில் புதிய கழிப்பறைகள் கட்டுதல்.

- ரூ.70.00 இலட்சம் மதிப்பில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வக உபகரணங்கள் வழங்குதல்.
- ரூ.13.89 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளிகளில் நவீன ஸ்மார்ட் போர்டு (Smart Board) வசதிகள் ஏற்படுத்துதல்.
- சுற்றுலா செல்லவும், சாரண சாரணிய இயக்க செயல்பாடுகளுக்காகவும், ரூ.20.25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**பள்ளிகளின் சிறப்பான செயல்பாடுகள்**

மாநில அளவிலான கலைத்திருவிழா போட்டியில் சிறப்பிடம் பெற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கீழ்க்கண்ட பள்ளிகளின் மாணாக்கர் பரிசு பெற்றனர்.

- அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளி செம்புளிச்சாம்பட்டி, திருச்சி மாவட்டம் "கிராமிய குழு" நடனத்தில் மாநில அளவில் இரண்டாம் இடம்.
- அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி பத்துகாணி, கன்னியாகுமரி மாவட்டம் – "கேலிச்சித்திரம்" வரைதலில் மாநில அளவில் மூன்றாம் இடம்.
- அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி பர்கூர், ஈரோடு மாவட்டம் "தெருக்கூத்து" போட்டியில் மாநில அளவில் இரண்டாம் இடம்.

மாமல்லபுரத்தில் நடைபெற்ற 44–வது சர்வதேச சதுரங்க விளையாட்டுப் போட்டிகளை முன்னிட்டு மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் (30.07.2022, 31.07.2022) போட்டிகள் மாணாக்கருக்கு நடத்தப்பட்டன. தேர்வு செய்யப்பட்ட 99 மாணாக்கர் ரஷ்யன் கலாச்சார மையம் மற்றும் சர்வதேச சதுரங்க போட்டிக்கான பயிற்சி ஆணையத்தின் தலைவர் திரு.மிகைல் கோபாலியா மற்றும் ரஷ்ய நாட்டின் சர்வதேச கிராண்ட் மாஸ்டர் திரு.வலோடார் முர்சீன்

அவர்களுடன் விளையாடி 44–வது சர்வதேச சதுரங்க போட்டியினை நேரில் கண்டுகளித்தனர்.

**(ஆ) ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள்**

மாநில மற்றும் ஒன்றிய அரசின் நிதிப் பங்களிப்புடன் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழிக் கல்வி முறையில் 8 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

| வ.எண் | மாவட்டம் | இடம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி | வெள்ளிமலை | 460 | 0 | 460 |
| 2 | சேலம் | அபிநவம் | 0 | 480 | 480 |
| 3 | நீலகிரி | மு.பாலாடா | 160 | 122 | 282 |
| 4 | நாமக்கல் | செங்கரை | 273 | 108 | 381 |
| 5 | திருவண்ணாமலை | அத்திப்பட்டு | 235 | 167 | 402 |
| 6 | திருப்பத்தூர் | புதூர்நாடு | 157 | 114 | 271 |
| 7 | செங்கல்பட்டு | குமிழி | 92 | 70 | 162 |
| 8 | சேலம் | ஏற்காடு (நாகலூர்) | 104 | 64 | 168 |
| **மொத்தம்** | | | **1,481** | **1,125** | **2,606** |

**சிறப்பான செயல்பாடுகள்.**

தேசிய பழங்குடியினர் நல உண்டி உறைவிட கல்வி மற்றும் நிறுவனச் சங்கத்தின் கீழ் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் 2022–2023–ஆம் ஆண்டிற்கான 3–வது தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் ஆந்திர மாநிலம் குண்டூரில் 07.12.2022 முதல் 22.12.2022 வரை நடைபெற்றது. தமிழகத்தை சார்ந்த 8 பள்ளிகளின் 94 மாணவர் மற்றும் 83 மாணவியர் உட்பட 177 மாணாக்கர் போட்டிகளில் கலந்து கொண்டு தனிநபர் பிரிவில் 10 தங்கம், 13 வெள்ளி மற்றும் 27 வெண்கலப் பதக்கங்களுடன் 50 பதக்கங்களை பெற்று தேசிய அளவில் 5–வது இடத்தை பெற்றனர். ஆண்களுக்கான கைப்பந்து (Volley Ball) குழு போட்டியில் வெள்ளிப் பதக்கம் (Runner up) பெற்றனர்.

## பதக்கப்பட்டியல் விவரம்

| வ.எண் | போட்டி | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|---|
| 1 | நீச்சல் போட்டி | 6 | 6 | 8 |
| 2 | குத்துச்சண்டை | 2 | 5 | 15 |
| 3 | குண்டெறிதல் | 1 | 1 | 0 |
| 4 | சதுரங்கம் | 1 | 0 | 0 |
| 5 | 100 மீட்டர் தொடர் ஓட்டம் (4X100) | 0 | 1 | 1 |
| 6 | 100 மீட்டர் ஓட்டம் | 0 | 0 | 1 |
| 7 | 200 மீட்டர் ஓட்டம் | 0 | 0 | 1 |
| 8 | நடைபோட்டி | 0 | 0 | 1 |
| மொத்தம் | | 10 | 13 | 27 |

### (இ) பழங்குடியினர் நல விடுதிகள்

பழங்குடியின மக்களின் தொடர்ச்சியான இடம் பெயர்தலால் ஏற்படும் மாணாக்கரின் இடைநிற்றலை முற்றிலும் தவிர்த்து அவர்கள் தொடர்ச்சியாக கல்வி கற்பதை உறுதி செய்யும் பொருட்டு அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய விடுதிகள் பழங்குடியின மாணக்கருக்காக நடத்தப்பட்டு வருகின்றன.

**பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம் (2022–2023)**

| விடுதிகள் | விடுதிகளின் எண்ணிக்கை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---:|---:|---:|---:|
| பள்ளி விடுதிகள் | 40 | 1,010 | 888 | 1,898 |
| கல்லூரி விடுதிகள் | 2 | 0 | 81 | 81 |
| தொழிற்பயிற்சி நிலைய விடுதிகள் | 6 | 365 | 0 | 365 |
| மொத்தம் | 48 | 1,375 | 969 | 2,344 |

- பழங்குடியின மாணவியரின் உயர்கல்வியை உறுதி செய்யும் பொருட்டு 2022–2023–ஆம் நிதியாண்டில் புதியதாக நாமக்கல், திருப்பத்தூர், தருமபுரி, திருச்சி ஆகிய மாவட்டங்களில் நான்கு கல்லூரி மாணவியர் விடுதிகள் ரூ.2.40 கோடி செலவில் துவங்கப்பட்டுள்ளன.

- அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள்/ விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கான உணவுக் கட்டணம் பள்ளி

மாணாக்கருக்கு ரூ.1,000/—ஆகவும், கல்லூரி மாணாக்கருக்கு ரூ.1,100/—ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.

- சிறப்பு விழா நாட்களில் வழங்கப்படும் உணவுக் கட்டணம் பள்ளி மாணாக்கருக்கு ரூ.40/—ஆகவும் மற்றும் கல்லூரி மாணாக்கருக்கு ரூ.80/—ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.
- சோப்பு, எண்ணெய், முடிவெட்டுதல் போன்ற ஏனைய சில்லரைச் செலவினங்களுக்காக வழங்கப்படும் தொகை, பள்ளி விடுதி மாணாக்கருக்கு ரூ.100/—ஆகவும், கல்லூரி விடுதி மாணாக்கருக்கு ரூ.150/—ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.
- மலைப்பாங்கான இடங்களில் அமைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு ஆரோக்கியமான கல்வி பயிலும் சூழலை உருவாக்கிட சூரிய ஒளி மின்விளக்கு (Solar Light), கம்பளி ஆடை (Sweater) மற்றும் மழை அங்கி

(Rain coat) ஆகியவை கூடுதலாக வழங்கப்பட்டு வருகின்றன.

### சிறப்பு அம்சங்கள்

2022–2023–ஆம் நிதியாண்டில், 128 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் எரிவாயு இணைப்பு, சென்னை மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள 2 கல்லூரி மாணவியர் விடுதிகளில் 55 அங்குல தொலைக்காட்சிப் பெட்டிகள், இணைய வழி நூலகங்கள், மருத்துவப் பரிசோதனை முகாம்கள் மற்றும் 18 விடுதிகளில் கண்காணிப்புக் கேமராக்கள் ஆகிய வசதிகள் ரூ.94.75 இலட்சம் செலவில் செய்து தரப்பட்டுள்ளன.

### (ஈ) தொழிற்பயிற்சி நிலையங்கள்

பழங்குடியின மாணாக்கர் உற்பத்தித் துறைகளில் வேலைவாய்ப்பைப் பெற வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையுடன் இணைந்து பழங்குடியினருக்கென பிரத்தியேகமாக ஆறு தொழிற்பயிற்சி நிலையங்கள் விடுதி வசதியுடன் இயங்கி வருகின்றன. 2022–2023–ஆம் ஆண்டில் 904 மாணாக்கருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் மாணாக்கர் விவரம் (2022 – 2023 )**

| தொழிற்பயிற்சி நிலைய மையங்கள் | தையல் தொழில் பயிற்சி | மின்னியல் வல்லுனர் | பொருத்துபவர் | வண்டி பழுதுபார்ப்பவர் | குழாய் செப்பனிடுபவர் | பற்ற வைப்பவர் | கம்பி பற்ற வைப்பவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| கூடலூர் | – | – | 20 | 24 | 48 | 40 | 20 | 152 |
| ஆனைக்கட்டி | – | 20 | 20 | 24 | – | 40 | 20 | 124 |
| கொல்லிமலை | 40 | 20 | 20 | 48 | – | 40 | – | 168 |
| கருமந்துறை | – | 20 | 20 | 24 | 29 | 40 | – | 133 |
| சங்கராபுரம் | – | 20 | 60 | 48 | – | 40 | 20 | 188 |
| முனாமரத்தூர் | – | – | 20 | 24 | 39 | 36 | 20 | 139 |
| மொத்தம் | 40 | 80 | 160 | 192 | 116 | 236 | 80 | 904 |

இத்தொழிற்பயிற்சி நிலையங்களின் மாணாக்கருக்கான விடுதிகள் பழங்குடியினர் நலத்துறையால் நடத்தப்படுகின்றன.

இத்தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் விடுதிகளின் செயல்பாட்டிற்காக 2022–2023–ஆம்

நிதியாண்டில் ரூ.8.17 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2023–2024–ஆம் நிதியாண்டில் இத்தொழிற்பயிற்சி நிலையங்களின் நிருவாக செயல்பாட்டிற்காக ரூ.9.74 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (உ) தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கான நிதியுதவி

### (i) விடுதியுடன் கூடிய பள்ளி

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் வசிக்கும் பழங்குடியின மாணாக்கருக்காக Society For Rural Development (SFRD) தொண்டு நிறுவனத்தால் நடத்தப்பட்டு வரும் மேல்நிலைப் பள்ளியில் 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் 1,808 மாணாக்கரின் கல்வி நலன் கருதி, இப்பள்ளியில் பணிபுரியும் 36 ஆசிரியர் மற்றும் 7 ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஊதியம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. விடுதியில் தங்கிப் பயிலும் 550 பழங்குடியின மாணாக்கருக்கான

உணவுக் கட்டணம், சில்லரைச் செலவினம் மற்றும் இதர சலுகைகள் 2005–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இப்பள்ளி மாணவர்கள் ஆண்டு தோறும் நடத்தப்படும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி பெற்று வருகின்றனர்.

2022–2023–ஆம் நிதியாண்டில் ரூ.3.12 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

2023–2024–ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.3.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ii) விடுதிகள்**

கோயம்புத்தூர் மாவட்டம் – வித்யாவனம் மற்றும் விருதுநகர் மாவட்டம் – ராம்கோ & குரூப் ஆகிய தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் 100 பழங்குடியின மாணாக்கருக்கு உணவுக் கட்டணம் மற்றும் இதர

சலுகைகள் அரசுப் பள்ளி மாணாக்கருக்கு இணையாக வழங்கப்படுகிறது.

**(ஊ) பழங்குடியினர் வாழும் உட்புறப் பகுதிகளில் பள்ளிகள் துவங்கிட முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டம்**

தொலைதூர கிராமங்களில் வசிக்கும் பழங்குடியின மாணாக்கர் அனைவருக்குமான தரமான கல்வியை அளிக்கும் பொருட்டு ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் பள்ளிகள் நடத்த முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

2022-2023-ஆம் நிதியாண்டில் மான்ட்போர்டு சமுதாய அமைப்பு ஏற்காடு, சேலம் மற்றும் சமுதாய சேவை மையம், கள்ளக்குறிச்சி ஆகிய தொண்டு நிறுவனங்களால் பழங்குடியின மாணாக்கருக்காக நடத்தப்படும் பள்ளிகளுக்கு ரூ.3.04 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மான்ட்போர்டு சமுதாயப் பள்ளியின்

மூலம் 895 மாணாக்கரும், சமுதாய சேவை மையம் மூலம் 284 மாணாக்கரும் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென, 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.14.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2. கல்வி உதவித் தொகை

பழங்குடியின குழந்தைகளை அவர்தம் பெற்றோர் பள்ளிக்கு தொடர்ந்து அனுப்பவும், அவர்களின் நிதிச்சுமையைக் குறைக்கவும், பள்ளிக் கல்வியை முடித்து உயர்கல்வியில் மாணவர்கள் சேருவதை ஊக்கப்படுத்தவும் பல்வேறு கல்வி உதவித் தொகை மற்றும் கட்டணச் சலுகைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### (அ) பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டம்

பெண் குழந்தைகளின் கல்வி இடைநிற்றலை தவிர்க்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் பள்ளி செல்வதை உறுதிப்படுத்தவும், 3 முதல் 8–ஆம் வகுப்பு

வரை பயிலும் மாணவியருக்கு கீழ்க்கண்டவாறு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

| வ. எண் | வகுப்பு | ஊக்கத்தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | 3 முதல் 5 வரை | 500/- |
| 2 | 6 | 1000/- |
| 3 | 7 மற்றும் 8 | 1500/- |

2022-2023-ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் மூலம் 27,098 மாணவியர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக, 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.3.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்**

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு பயிலும் பழங்குடியின மாணாக்கரின் கல்விக்கான செலவினத்தில் ஒரு பகுதியை அரசே ஏற்றிடும் வகையில், ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கான செலவினத் தொகை 75:25 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் பின்வருமாறு செலுத்தப்படுகிறது.

| | **விடுதி மாணாக்கர்** | **வெளி மாணாக்கர்** |
|---|---|---|
| | **(ரூபாயில்)** | |
| பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு) | 525/- | 225/- |
| தனி மானியம் (ஒரு ஆண்டுக்கு) | 1,000/- | 750/- |

2022-2023-ஆம் நிதியாண்டில் 17,697 மாணாக்கர் பயனடையும் வகையில் ரூ.5.34 கோடி கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.5.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம்

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள பழங்குடியின மாணாக்கர் இக்கல்வித் திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியுடையவர்கள். இக்கல்வி உதவித் தொகைக்கான செலவினம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 75:25 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

### (i) அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில், பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளை பயிலும் பழங்குடியின மாணாக்கரால் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டாய மற்றும் திரும்பப் பெற இயலாத கல்விக் கட்டணங்கள் மற்றும் பராமரிப்புப்படி கல்வி உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

**(ii) சுயநிதிக் கல்வி நிறுவனங்கள்**

சுயநிதிக் கல்லூரிகளில் கல்வி பயிலும் பழங்குடியின மாணாக்கரால் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய, அரசு / சுயநிதிக் கல்லூரிகளுக்கான கல்விக் கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணம் அம்மாணாக்கர் சார்பாக கல்வி நிறுவனங்களின் வங்கிக் கணக்குகளிலும் பராமரிப்புப்படி மாணாக்கரின் வங்கிக் கணக்கிலும் நேரடியாக செலுத்தப்படுகிறது.

**பராமரிப்புப்படி விவரம்**

போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் மாணாக்கருக்கு வழங்கப்படும் பராமரிப்புப்படி குறித்த விவரம் பின்வருமாறு.

| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப்படி (ரூ.) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் (Hosteller) | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| I | பொறியியல், மருத்துவம், சட்டம், நவீன ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பம் (Fashion Technology), கால்நடை, வேளாண்மை மற்றும் அதைச்சார்ந்த தொழில் படிப்புகளில் பட்டம் மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு படிப்புகளில் முதுநிலை பட்டயம் / பட்டயக் கணக்கர் (CA/CWA/CS/*CFA* etc.,) மற்றும் முதுநிலை ஆராய்ச்சி மற்றும் முனைவர் பட்டப்படிப்பு (M.Phil, Ph.D., & Post Doctoral programmes) | 1,200/– | 550/– |
| II | 12–ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாக கொண்ட மருந்தாக்கியல், செவிலியர், விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஹோட்டல் | 820/– | 530/– |

| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப்படி (ரூ.) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் (Hosteller) | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| | மேலாண்மை போன்ற தொழிற் படிப்புகளில் பட்டம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் (B.Sc.,(Nursing), B.Pharm, B.O.T, B.P.T, M.Sc (Nursing), M.Pharm, M.P.T etc.,) | | |
| III | தொகுதி I மற்றும் II–ல் இடம் பெறாத இதர இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டப் படிப்புகள் (B.A./ B.Sc./ B.Com./ M.A.,/ M.Sc./ M.Com., etc., ) | 570/– | 300/– |
| IV | 10–ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட தொழில் நுட்பப் பட்டயப்படிப்புகள், சான்றிதழ் படிப்புகள், மேல்நிலைக் கல்வி படிப்புகள் மற்றும் தொழிற்பயிற்சி படிப்புகள். (XI, XII, ITI, தொழிற்பயிற்சிக் கல்வி etc.,) | 380/– | 230/– |

2022–2023–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் மூலம் 25,684 மாணக்கர் பயன்பெறும் வகையில் ரூ.37.31 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.46.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (ஈ) உயர் கல்விக்கான இதர கல்வி உதவித் தொகை திட்டங்கள்

பழங்குடியின மாணாக்கரின் உயர்கல்வி சேர்க்கையை ஊக்கப்படுத்தவும் உயர்கல்வி தொடர்ந்து பயில்வதை உறுதி செய்யவும் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:–

- கற்பிப்புக் கட்டணம், விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் ஈடு செய்தல்.
- உயர் கல்விச் சிறப்பு படிப்பு உதவித் தொகை.
- இளங்கலை மாணாக்கருக்கான கல்விக் கட்டணச் சலுகை.
- முதுகலை மாணவியருக்கான கல்விக் கட்டணச் சலுகை.

- வெளிநாடுகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கருக்கான கல்வி உதவித் தொகை திட்டம்.
- முழுநேர முனைவர் ஆராய்ச்சி படிப்பிற்கான ஊக்கத்தொகை திட்டம்.

## 2. அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

### (அ) விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் நில மேம்பாடு, வீடுகள் கட்டித் தருதல், சாலை, குடிநீர், தெருவிளக்கு வசதிகளை மேம்படுத்துதல் தனிநபர் மற்றும் குழுக்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துதல் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2022–2023–ஆம் நிதியாண்டின் புதிய முன்னெடுப்புகள்**

- ரூ.50.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் அழிவின் விளிம்பிலுள்ள வீடற்ற 1,094 பழங்குடியின மக்களுக்கு வீடுகள் கட்டுதல்.

- தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் செங்கல்பட்டு, தேனி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் கட்டப்பட்ட வீடுகளின் 226 குடும்பங்களுக்கான பங்குத் தொகை ரூ.3.66 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- அரியலூர் மாவட்டத்தில் உள்ள 16 கிராமங்களில் வாழும் இருளர் மக்களுக்கு 967 ஏக்கர் நிலப்பரப்பில் முந்திரி சேகரம் செய்வதற்கு சிறப்பினமாக ரூ.86.13 இலட்சம் வழங்கப்பட்டு 500 குடும்பங்களைச் சேர்ந்த 2,000-க்கும் மேற்பட்ட கூலித் தொழிலாளிகளாக இருந்தவர்கள் தற்போது தொழில் முனைவோராக தரம் உயர்த்தப்பட்டு உள்ளனர்.

- 'ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் உன்னிக்குச்சி மூலம் ரூ.1.36 கோடி செலவில் தளவாடப் பொருட்கள் உற்பத்திக்கான தொழிற்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.95.75 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2,126 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2023-2024-ஆம் நிதியாண்டிற்கு ரூ.94.99 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (Integrated Tribal Development Programme)

வருவாய் வட்டார அளவில் மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதற்கு மேல் பழங்குடியின மக்கள் வசிக்கும் சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி மற்றும் திருப்பத்தூர் ஆகிய ஏழு மாவட்டங்களில் உள்ள 10 மலைப் பகுதிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இப்பகுதிகளின் மேம்பாட்டிற்காக பழங்குடியினருக்கான ஏழு திட்ட அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு பல்வேறு நலத்திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள்**

| வ.எண். | மாவட்டம் | திட்டப்பகுதிகள் |
|---|---|---|
| 1. | சேலம் | ஏற்காடு, பச்சமலை, அருநூத்துமலை மற்றும் கல்வராயன்மலை |
| 2. | நாமக்கல் | கொல்லிமலை |
| 3. | கள்ளக்குறிச்சி | கல்வராயன்மலை |
| 4. | திருவண்ணாமலை | ஜவ்வாதுமலை |
| 5. | திருச்சிராப்பள்ளி | பச்சமலை |
| 6. | தருமபுரி | சித்தேரிமலை |
| 7. | திருப்பத்தூர் | ஜவ்வாது மற்றும் ஏலகிரிமலை |

இத்திட்டத்தின் கீழ் 2022–2023–ஆம் ஆண்டில் ரூ.3.23 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.3.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) பழங்குடியினர் குடியிருப்புகளில் வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டம்**

பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை முழுமை அடையச் செய்வதன் பொருட்டு சுகாதாரமான குடிநீர், மேம்படுத்தப்பட்ட சாலை வசதிகள், நவீன சூரிய மின்விளக்கு, தெருவிளக்குகள், நவீன கழிப்பறைகளுடன் கூடிய வீடுகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்காக சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பழங்குடியினர் நலத்துறை, வனம் மற்றும் கால நிலை மாற்றம் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆகிய துறைகள் மூலம் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:–

- ரூ.294.00 கோடி மதிப்பீட்டில் 25 மாவட்டங்களில் 8,803 வீடுகள்.
- ரூ.135.00 கோடி மதிப்பீட்டில் 187 சாலைப் பணிகள்.

- ரூ.5.61 கோடி மதிப்பீட்டில் 2,806 தெரு விளக்குகள்.
- ரூ.105.38 கோடி மதிப்பீட்டில் 1,173 குடிநீர் பணிகள்.
- ரூ.12.86 கோடி மதிப்பீட்டில் 4,288 சூரிய மின் விளக்குகள்.
- ரூ.126.00 கோடி செலவில் 2,787 வீடுகள் 22 மாவட்டங்களில் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.100.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஈ) பிரதம மந்திரியின் பழங்குடியினர் முன் மாதிரி கிராமத்திட்டம் ((Pradhan Mantri Aadi Adarsh Gram Yojana)**

மொத்த மக்கள்தொகையில் 50 விழுக்காடு அல்லது 500–க்கும் அதிகமான பழங்குடியின மக்கள் வசிக்கும் 167 கிராமங்களின் அடிப்படை

உட்கட்டமைப்புத் தேவைகளை 5 ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்திட (2021-2022 முதல் 2025-2026 வரை) இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் 167 கிராமங்கள் கண்டறியப்பட்டு அடிப்படை வசதிக்கான தேவைகளை கணக்கிட்டு ஒரு கிராமத்திற்கு ரூ.20.38 இலட்சம் வீதம் இத்திட்டத்தின் கீழ் நிதி பெறப்பட்டு மற்ற திட்டங்களிலிருந்தும், பிற துறைகளிலிருந்தும் கூடுதல் நிதி ஆதாரங்களை திரட்டி "இடை நிரப்புதல்" (Gap Filling) என்பதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.7.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(உ) இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275 (1)**

பழங்குடியினரின் கல்வி மேம்பாடு, சுகாதாரம், குடிநீர் வசதி, சாலை வசதிகள், இணையதள சேவை,

பொருளாதார நிலை உயர்வு போன்றவற்றிற்காக இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2022–2023–ஆம் நிதியாண்டில் ரூ.11.46 கோடிக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஊ) அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்**

பழங்குடியினர் மக்கள் தொகை வளர்ச்சியில் தேக்கம் அல்லது குறைவு, அதீத வேளாண்மை சார்ந்த பொருளாதாரம் மற்றும் குறைந்த கல்வியறிவு போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தோடர், கோத்தர், இருளர், குரும்பர், பனியன் மற்றும் காட்டுநாயகன் ஆகிய ஆறு இனத்தவர்கள் "அழிவின் விளிம்பில் உள்ள பண்டைய பழங்குடியினர்" என வகைப்படுத்தப் பட்டுள்ளனர்.

இத்தகைய மக்கள் குறித்த தளநிலை கணக்கெடுப்பு (PVTGs Baseline Survey) மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில் வீட்டு வசதி, கல்வி மேம்பாடு, சுகாதாரக் கட்டமைப்பு, நில மேம்பாடு, சூரிய உயர் மின் கோபுர விளக்கு, மேம்படுத்தப்பட்ட வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, பாசன வசதி, திறன் மேம்பாடு மற்றும் அவர்களின் கலாச்சார பாதுகாப்பு போன்ற கூறுகளில் திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

அழிவின் விளிம்பில் உள்ள 6 பண்டைய பழங்குடியினரின் இனவரவியல் குறித்து ரூ.48.00 இலட்சம் செலவில் ஆய்வு செய்யப்பட்டு அவர்களது கலாச்சாரங்கள் ஒலி / ஒளி ஆவணங்களாக பதிவு செய்து ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

2022–2023–ஆம் நிதியாண்டில்' ரூ.36.31 கோடிக்கான திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது .

இத்திட்டத்திற்கென 2023-2024-ஆம் நிதியாண்டிற்கு ரூ.40.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (எ) சிறு வன விளை பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைத் திட்டம்

வனங்களை சார்ந்து வாழும் பெரும்பாலான பழங்குடியின மக்கள் வாழ்வாதாரத்திற்காக சிறு வனப் பொருட்களையே சார்ந்துள்ளனர்.

வன உரிமைச் சட்டம் 2006-இன்படி, மூங்கில், தேன், மெழுகு, அரக்கு, மூலிகைகள், கிழங்குகள் போன்ற பல வகையான பொருட்கள் சிறுவனப் பொருட்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இத்தகைய சிறு வன பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், மதிப்புக் கூட்டவும், சந்தைப்படுத்துதல் வாய்ப்புகளை உருவாக்கவும், "சிறு வன விளை பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை" என்ற திட்டம் பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் மேம்பாட்டு கூட்டமைப்பு (TRIFED) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வன வள மையமும் 20 உறுப்பினர்களைக் கொண்ட 15 சுய உதவிக் குழுக்களைக் கொண்டு (300 உறுப்பினர்கள்) உருவாக்கப்பட்டு ஒரு வனவள மையத்திற்கு ரூ.15.00 இலட்சம் 100% மானியமாக வழங்கப்படுகிறது. இத்தொகை இயந்திரங்கள் வாங்குதல், பயிற்சி அளித்தல், மதிப்புக் கூட்டுதல் போன்றவற்றிற்காக செலவிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் பின்வரும் 4 மாவட்டங்களில் 8 வன வள மையங்கள் செயல்பாட்டில் உள்ளன.

| **வ. எண்.** | **மாவட்டம்** | **வனவள மைய இருப்பிடம்** |
|---|---|---|
| 1 | திருவண்ணாமலை | ஜவ்வாது மலை (3) |
| 2 | சேலம் | ஏற்காடு, கருமந்துறை, அருநூத்துமலை |
| 3 | திருப்பத்தூர் | புதூர்நாடு |
| 4 | வேலூர் | பீஞ்சமந்தை |

### 3. பழங்குடியினர் மற்றும் பிற மரபுவழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம் 2006

வாழ்வாதாரம், குடியிருப்பு, சமூக கலாச்சார மற்றும் இதர தேவைகளுக்காக வனங்களை சார்ந்து வாழும் பழங்குடியினர் மற்றும் இதர மரபுவழி வாழ்பவர்களின் வனம் சார்ந்த உரிமையினை சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கும் பொருட்டு "பழங்குடியினர் மற்றும் பிற மரபுவழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006-இல் இயற்றப்பட்டு, 29.12.2006 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின்படி 13.12.2005-ஆம் நாளுக்கு முன்பு வனங்களில் குடியிருப்போர் மற்றும் வனங்களை சார்ந்து சுற்றுப்புறங்களில் வாழும் பழங்குடியினரும் இத்தேதிக்கு முன்பு மூன்று தலைமுறைகளாக (75 ஆண்டுகளாக) வனங்களில் குடியிருப்போர் மற்றும் வனங்களை சார்ந்து சுற்றுப்புறங்களில் வாழும் இதர

மரபினரும் வன உரிமைகள் பெற தகுதியுள்ளவர்கள் ஆவர்.

வன உரிமைகள் அங்கீகரித்தல் சட்டம் 2006–இன் கீழ் தனிநபர் வனநில பயன்பாடு, வன வளப் பொருட்களை சேகரித்தல் மற்றும் விற்பனை செய்தல், மேய்ச்சல் நிலப்பயன்பாடு, வன நிலங்களை சாலை, பள்ளி, மற்றும் வழிபாட்டுத் தலங்கள் போன்ற பொதுப் பயன்பாட்டிற்காக பயன்படுத்துதல் ஆகிய செயல்பாடுகளுக்கு கீழ்க்கண்ட 5 வகையான வன உரிமைகள் வழங்கப்படுகின்றன.

1. தனிநபர் உரிமை
2. சமுதாய உரிமை
3. சமுதாய வன வள உரிமை
4. சமுதாய மேம்பாட்டு உரிமை
5. அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினருக்கான குடியிருப்பு உரிமை (Habitat Right)

இச்சட்டத்தின் கீழ் பெறப்படும் விண்ணப்பங்களைக் கூர்ந்தாய்வு செய்து உரிமைகள்

வழங்க கிராம சபை, வருவாய் கோட்டக் குழு மற்றும் மாவட்டக் குழு ஆகிய மூன்று அளவில் குழுக்கள் செயல்படுகின்றன.

தலைமைச் செயலாளர் தலைமையிலான மாநில அளவிலான கண்காணிப்புக் குழு இச்சட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்கிறது.

வன உரிமைச் சட்டம் 2006 தொடர்பான பயிற்சியினை வழங்கிடும் வகையில் திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தேனி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 9 மாவட்டங்களைச் சேர்ந்த வனத்துறை, வருவாய்த்துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆகிய துறைச் சார்ந்த மாவட்ட அலுவலர்கள், மாவட்ட, கோட்ட அளவிலான குழு உறுப்பினர்கள் மற்றும் கிராம வன உரிமைக் குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கான 2 நாட்கள் விழிப்புணர்வு மற்றும் செயலாக்கப் பயிற்சி முகாம்

திருச்சியில் நடைபெற்றது. இதில் 200 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இச்சட்டத்தின் கீழ் இதுவரை 10,410 தனிநபர் உரிமைகளும், 528 சமூக உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

## 4. பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல்

வருவாய் கோட்டாட்சியர் / சார் ஆட்சியரால் பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்க மாநில அளவில் மூன்று கூர்நோக்குக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## மாநில அளவிலான கூர்நோக்குக் குழுக்கள்

| | |
|---|---|
| அரசு செயலாளர் / கூடுதல் செயலாளர்/ இணைச் செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | தலைவர் |
| பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் / பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் தரத்திற்கு சமமான இந்திய வனப்பணி அலுவலர் | உறுப்பினர்– செயலர் |
| இயக்குநர், பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்/ மானுடவியல் வல்லுநர் | உறுப்பினர் |

**கண்காணிப்புப் பிரிவுகள்**

சென்னை, சேலம், வேலூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டலங்களில் வழங்கப்பட்ட பழங்குடியினர் சாதிச் சான்றிதழின் மெய்த்தன்மை பற்றி கள ஆய்வு செய்து, மாநில கூர்நோக்குக் குழுக்களுக்கு அறிக்கை அளிக்க துணை காவல் கண்காணிப்பாளர்

தலைமையில் கண்காணிப்புப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

மேலும், காவல்துறை தலைவரின் தலைமையின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கிவரும் சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு பழங்குடியினர் சாதிச்சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டு, களஆய்வு மேற்கொண்டு மாநில கூர்நோக்குக் குழுக்களுக்கு பரிந்துரை செய்கின்றன.

## 5. பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்

பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் தமிழ்நாட்டில் வசிக்கும் பழங்குடியினரின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி, சமூக பொருளாதார மற்றும் கல்வி நிலை குறித்து ஆய்வு செய்வதற்காக 1985 ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் மு.பாலாடா என்ற இடத்தில் தொடங்கப்பட்டது.

இம்மையத்தில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு பழங்குடியினர் குறித்த கலைப்பொருட்கள் மற்றும் புகைப்படங்கள் பாதுகாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**2022–2023–ஆம் ஆண்டில் பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கியப் பணிகள்**

- இந்தியாவின் 75–வது சுதந்திர தினத்தையொட்டி (Azadi ka Amrut Mahotsav), ஒடிசா மாநிலத்தில் நடத்தப்பட்ட 9–வது தேசிய பழங்குடியின கைவினைப்பொருட்கள் திருவிழாவில் தமிழகத்தின் சார்பில் தோடர் பழங்குடியின பெண்கள் மூவர் பங்கு கொண்டு முதல் பரிசு பெற்றமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர்.
- பழங்குடியின சுதந்திரப் போராட்ட வீரர்களின் பங்கினை போற்றும் வகையில் பழங்குடியினர்

பெருமை தினம் (Janjatiya Gaurav Divas) மாநில அளவில் சென்னையில் கொண்டாடப்பட்டது.

- பழங்குடியினர் ஆராய்ச்சி மைய வளாகத்தில் ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக வடிவமைக்கப்பட்ட தகவல் களஞ்சியத்துடன் கூடிய புகைப்பட அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டது.
- 23.11.2022 மற்றும் 24.11.2022 அன்று "பழங்குடி சமூகங்களின் நிலையான வளர்ச்சி, பிரச்சனைகள் மற்றும் சவால்கள்" என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கு நடைபெற்றது.

இம்மையத்தின் நிருவாகச் செலவினங்கள் மாநில அரசாலும், திட்ட நடவடிக்கைகள் குறித்த செலவினங்கள் ஒன்றிய அரசின் பழங்குடியினர் நல அமைச்சகத்தாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023-2024-ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் நிருவாகச் செலவுகளுக்காக ரூ.56.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம்

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் இயங்கி வரும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம், பழங்குடியின இளைஞர்கள் தமது வேலையினைத் தேர்ந்தெடுக்க ஆலோசனை மற்றும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளை வழங்கி வருகிறது.

இம்மையத்தின் செயல்பாட்டிற்காக 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.34.37 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2023-2024-ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் செயல்பாட்டிற்காக ரூ.39.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## III. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

ஆதி திராவிட மக்களுக்கு அரசின் சார்பில் வீடுகளை கட்டிக் கொடுக்கும் நிறுவனமாக 1974–ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) தொடங்கப்பட்டது. சமூகத்தின் அடித்தட்டு நிலையில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை பொருளாதார ரீதியில் மேம்படச் செய்யும் வகையில் பல்வேறுபட்ட தொழில் முனைவு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான அரசின் திட்டங்களை செயல்படுத்திடும் நிறுவனமாக தாட்கோ செயல்பட்டு வருகின்றது.

இக்கழகத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.200.00 கோடியும், செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.147.11 கோடியும் உள்ளது. இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் 1980–ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசால் 51 விழுக்காடும், ஒன்றிய அரசால்

49 விழுக்காடும் என்கின்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

**தாட்கோவின் நடவடிக்கைகள்**

1 பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

2 இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்.

3 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்.

## 1. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார நிலையினை மேம்படுத்தி அவர்களது சமூக நிலையினை உயர்த்திடும் வகையில் பல்வேறுபட்ட தொழில் முனைவுத் திட்டங்கள் தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் மாநில மற்றும் ஒன்றிய அரசின் நிதியுதவி, வங்கிகள் மற்றும் தேசிய பட்டியலினத்தோர் நிதி மேம்பாட்டுக் கழகம், தேசிய பழங்குடியினர் நிதி

மேம்பாட்டுக் கழகம், மற்றும் தேசிய துப்புரவுப் பணியாளர்கள் நிதி மேம்பாட்டுக் கழகங்களிலிருந்து பெறப்பட்ட நிதியாதாரங்கள் மூலம் கடனுதவி வழங்கி செயல்படுத்தப்படுகிறது.

விவசாயம், சிறுதொழில், வணிகம் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளில் தொழில் புரிந்து பொருளீட்ட உதவும் வகையில் ஆதி திராவிடர் மக்களுக்கு திட்டத் தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

பழங்குடியினருக்கு திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.3.75 இலட்சம் மற்றும் இலகுரக வாகனம் வாங்கிட ரூ.4.00 இலட்சம் வரையிலும், கனரக வாகனம் வாங்கிட ரூ.5.50 இலட்சம் வரையிலும் மானியமாக வழங்கப்படுகிறது.

தாட்கோவால் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் நிதியுதவி பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.2.00 இலட்சத்திலிருந்து 2022–2023–ஆம் ஆண்டு முதல் ரூ.3.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தொழில் தொடங்க சாதகமாக உள்ள தொழில் திட்டங்களை கண்டறிந்து இளைஞர்கள் புதிய வகை தொழில்களில் ஈடுபட உதவிடும் பொருட்டு மாவட்ட வாரியாக தொழில்நுட்ப பொருளாதார ஆய்வு (Techno–Economic Survey) நடத்தப்பட்டு, அதன் மூலம் திட்ட அறிக்கை வங்கி (Project Bank) ரூ.1.00 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

2022–2023–ஆம் நிதியாண்டில், பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ், 19,042 ஆதி திராவிடர் மற்றும் 1,502 பழங்குடியினருக்கு ரூ.171.82 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 1.1 தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், 18 வயது முதல் 65 வயது வரை உள்ள தனிநபர் மற்றும் குழுக்கள் தமது பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்ளும் பொருட்டு, பின்வரும் வருவாய் ஈட்டும் தொழில்கள் புரிந்திட உதவும் வகையில் வங்கிகள் மூலம் மானியத்துடன் கடன் உதவி வழங்கப்படுகிறது.

- விவசாயம் தொடர்பான வாகனங்கள் வாங்குதல்
- இலகுரக, கனரக வாகனங்கள் மற்றும் மகிழுந்து வாகனம் வாங்குதல்.
- பால் பண்ணை மற்றும் கோழிப் பண்ணை அமைத்தல்.
- பல்பொருள் அங்காடி, எழுதுபொருள் விற்பனை, உடற்பயிற்சிக் கூடம், அழகு நிலையம், வெதுப்பகம், தையலகம், மின்சாதனங்கள் விற்பனை, உணவகம், வாகன உதிரி பாகங்கள் விற்பனை, செல்லிடைபேசி பராமரிப்பு, துணிக் கடை

அமைத்தல் மற்றும் கட்டுமானப் பொருட்கள் விற்பனை.

2022–2023–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 7,098 பயனாளிகளுக்கு ரூ.104.97 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

## 1 .2 நிலம் வாங்கும் திட்டம் மற்றும் நில மேம்பாட்டுத் திட்டம்

விவசாயத் தொழிலாளர்களாக உள்ள ஆதி திராவிட மக்களை நில உடமையாளர்களாக மாற்றி அவர்களின் சமூக நிலையினை உயர்த்திடும் வகையில் நிலம் வாங்கும் திட்டம் 2004–2005–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு இத்திட்டத்தில் மகளிருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் நிலம் பிற இனத்தவரிடமிருந்து வாங்கப்பட வேண்டும். அவ்வாறு வாங்கப்படும் நிலங்களுக்கு முத்திரைத்தாள் மற்றும்

பதிவுக் கட்டணம் செலுத்துவதில் இருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

தற்போது, நிலத்தின் சந்தை மதிப்பு உயர்ந்துள்ளதால், இத்திட்டம் திருத்தி அமைக்கப்பட்டு, 2022–2023–ஆம் நிதியாண்டில் நிலமற்ற ஆதி திராவிட மற்றும் பழங்குடியின விவசாயத் தொழிலாளர்கள் விவசாய நிலம் வாங்க நிலத்தின் சந்தை மதிப்பில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.5.00 இலட்சம் மானியம் 200 பயனாளிகளுக்கு வழங்கிட ரூ.10.00 கோடி தாட்கோவிற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் நில உடமையை அதிகரிப்பது மட்டுமல்லாமல், அந்நிலங்களில் விவசாயத்தை மேம்படுத்திடும் வகையில் ஆழ்துளைக் கிணறு / திறந்தவெளிக் கிணறுகள் அமைத்தல் போன்றவைகளுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ், 2022–2023–ஆம் நிதியாண்டில் 36 பயனாளிகளுக்கு (17–நிலம் வாங்குதல், 19–நில மேம்பாடு) ரூ.88.34 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 1.3 இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், படித்த 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த / விருப்பமான சுய தொழில் துவங்க மானியத்துடன் கடன் உதவி வழங்கப்படுகிறது.

ஓட்டுநர் உரிமம் மற்றும் பேட்ஜ் வைத்துள்ள ஆதி திராவிடஇளைஞர்களுக்கு கனரக வாகனம் வாங்கிட திட்டத் தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு கனரக வாகனம் வாங்கிட திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.5.50 இலட்சம் வரையும், பயணியர் வாகனம் / ஈப்பு வாகனம் வாங்கிட திட்டத் தொகையில் 50 விழுக்காடு

அல்லது அதிகபட்ச மானியம் ரூ.4.00 இலட்சம் வரையிலும் இதர தொழில்களுக்கு திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.3.75 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுடன் பின்வரும் தொழில்களையும் மேற்கொள்ள நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

- கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை மற்றும் கோழிப்பண்ணை அமைத்தல்
- மலர் நிலையங்கள் அமைத்தல்.
- உள்நாட்டு மீன் வளர்ப்பு, நன்னீர் இறால் வளர்ப்பு

இத்திட்டத்தின் கீழ் 2022–2023–ஆம் நிதியாண்டில் 1,853 பயனாளிகளுக்கு ரூ.32.17 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## 1.4 இளைஞர்களுக்கான மருத்துவம் மற்றும் சுகாதாரம் சார்ந்த சிறப்பு சுய வேலை வாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், மருத்துவம் (MBBS), பல் மருத்துவம் (BDS), சித்த மருத்துவம் (BSMS), ஆயுர்வேத மருத்துவம் (BAMS) இயற்கை மருத்துவம் மற்றும் யோகா (BNYS) ஆகிய படிப்புகளில் பட்டம் பெற்றவர்கள், சொந்தமாக மருத்துவ சிகிச்சை மையம்/ ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கு மானியத்துடன் கடன் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் முட நீக்கு வல்லுநர், மருந்தாளுநர், கண்ணாடி வினைஞர் (optician) மற்றும் ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநர் முதலிய மருத்துவம் சார்ந்த படிப்புகளில் தகுதி பெற்றுள்ளவர்கள் சொந்தமாக மருத்துவ சிகிச்சை மையம் / கண் கண்ணாடி கடை / ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கும் உதவிடும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2022-2023-ஆம் நிதியாண்டில் 13 பயனாளிகளுக்கு ரூ.26.16 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## 1.5 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார உதவித் திட்டம்

மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், மகளிர் முன்னேற்றத்திற்கான அடிப்படை வருவாய் ஈட்டும் தோட்டக்கலை, மலரியல், கைவினைப் பொருட்கள், சுற்றுலாத் தலங்களில் சிற்றுண்டிக் கடைகள் அமைத்தல் மற்றும் சுற்றுலா சார்ந்த தொழில்கள் மேற்கொள்ளவும் மானியத்துடன் கூடிய வங்கி கடன் வழங்கப்படுகிறது.

இருமுறை தர நிர்ணயம் செய்யப்பட்ட ஆதி திராவிட சுய உதவிக்குழுக்கள் தங்களுக்குத் தெரிந்த வருமானம் ஈட்டக்கூடிய தொழில் அல்லது வணிக நிறுவனத்தினை துவக்குவதற்காக ஒவ்வொரு குழுவிற்கும் திட்டத் தொகையில் 50 விழுக்காடு

அல்லது அதிகபட்சம் ரூ.2.50 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

இருமுறை தர நிர்ணயம் செய்யப்பட்ட பழங்குடியின மகளிரை மட்டுமே உறுப்பினர்களாக கொண்டு இயங்கும் சுய உதவிக் குழுக்களுக்கு, அவர்கள் தொழில் செய்து வருவாய் ஈட்டிட உதவும் வகையில், திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2022-2023-ஆம் ஆண்டு 3,650 உறுப்பினர்களைக் கொண்ட 296 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.7.31 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.


தேசிய பட்டியலினத்தோர் நிதி மேம்பாட்டுக்கழகத்தின் மகிளா ஷம்ரிதி யோஜனா திட்டத்தின் கீழ் நிதி பெற்று 1,992 உறுப்பினர்கள் கொண்ட 166 மகளிர் சுய

உதவிக்குழுக்கள் பயன்பெறும் வகையில் ரூ.17.92 கோடி கூட்டுறவு வங்கிக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

## 1.6 விவசாயிகள் துரித மின் இணைப்பு பெற மானிய உதவித் திட்டம்

இத்திட்டம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் துரித மின் இணைப்பு பெறுவதற்காக 90 விழுக்காடு மானியம் மற்றும் 10 விழுக்காடு பயனாளியின் பங்களிப்புடன் வைப்புத் தொகை செலுத்தும் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வைப்புத் தொகையாக வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ.10,000/–லிருந்து படிப்படியாக உயர்த்தப்பட்டு 2021–2022–ஆம் நிதியாண்டிலிருந்து கீழ்க்கண்ட முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.




இத்திட்டத்தின் கீழ் 2022–2023–ஆம் நிதியாண்டில் 1,000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கான வைப்புத் தொகையாக ரூ.23.37 கோடி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்தப்பட்டு, துரித மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### 1.7 மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைத்தல்

அதிக அளவில் கறவை மாடு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிருக்கான பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை அமைத்து அவர்களின் வாழ்க்கைத்தரம் மேன்மை அடையும் வகையில்,

2,000 உறுப்பினர்களைக் கொண்ட 40 சங்கங்களை ஏற்படுத்திடும் திட்டம் 2022–2023–ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், சங்கத்திற்குத் தேவையான பதிவேடுகள், பரிசோதனை உபகரணங்கள் மற்றும் பால் கேன்கள் வாங்குவதற்காக ஒரு சங்கத்திற்கு ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ.40.00 இலட்சம் நிதி வழங்கப்படுகிறது.

2022–2023–ஆம் நிதியாண்டில் 2,000 உறுப்பினர்களைக் கொண்ட 40 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு ரூ.40.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 1.8 தீவனப்புல் வளர்க்க விதைத் தொகுப்பு மற்றும் புல்கறணைகள் வழங்கும் திட்டம்

தீவனப்புல் வளர்க்க விதைத் தொகுப்பு மற்றும் புல்கறணைகள் வழங்கும் திட்டம் 2022–2023–ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டு

1,000 விவசாயிகளுக்கு ரூ.1.00 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 1.9 ஆவின் பாலகம் அமைக்க மானியம்

ஆதி திராவிட தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில், மின் வாகனம் மற்றும் உறைவிப்பான், குளிர்விப்பான் போன்ற உபகரணங்களை கொள்முதல் செய்து ஆவின் பாலகம் அமைத்து வருவாய் ஈட்டிட 50 நபர்களுக்கு ரூ.45.00 இலட்சம் மானியம் வழங்கும் திட்டம் 2022-2023-ஆம் நிதியாண்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

## 1.10 கறவை மாடுகள் வாங்க மானியம்

இத்திட்டத்தின் கீழ் 450 ஆதிதிராவிடர் மற்றும் 50 பழங்குடியினர் என மொத்தம் 500 நபர்களுக்கு ரூ.2.25 கோடி மானியத்தில் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் 2022-2023-ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் 2022–2023–ஆம் நிதியாண்டில் 500 பயனாளிகளுக்கு ரூ.2.25 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**1 .11 தமிழ்நாடு சிமெண்ட் விற்பனை நிலையம் அமைக்க மானியம்**

100 ஆதி திராவிட தொழில் முனைவோருக்கு, தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவராக ரூ.3.00 கோடி மதிப்பீட்டில், சிமெண்ட் விற்பனை நிலையம் அமைத்து பல்வகை கட்டுமானப் பொருள் விற்பனை செய்து வருவாய் ஈட்டிட ரூ.90.00 இலட்சம் மானியம் 2022–2023–ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

**1.12 தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்**

தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் நிதியினை குறைந்த வட்டிக்கு பெற்று தாட்கோ மூலம் பருவக்கடன் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஆதி திராவிட மாணாக்கருக்கு மருத்துவம், பொறியியல், செவிலியர் போன்ற முழுநேர பட்டப்படிப்பு பயில்வதற்காக குறைந்த வட்டியில் (மாணவியருக்கு 4 விழுக்காடு மற்றும் மாணவர்களுக்கு 4.5 விழுக்காடு) தாட்கோ மூலம் கல்விக்கடன் வழங்கப்பட்டு வருகிறது.

2022–2023–ஆம் நிதியாண்டில் கல்விக்கடன் திட்டத்தின் கீழ் 44 மாணாக்கருக்கு ரூ.1.44 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 1 .13 தேசிய துப்புரவுப் பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

தேசிய துப்புரவுப் பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் நிதியினை பெற்று குறைந்த வட்டியில் தூய்மைப் பணிபுரிவோர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான பல்வேறு பருவக்கடன் திட்டங்கள் தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தூய்மைப் பணியாளர் மற்றும் அவர்களை சார்ந்தவர்கள் பருவக்கடன் பெற்று பயனடையும்

வகையில், 2022-2023-ஆம் ஆண்டுக்கு 1,265 நபர்களுக்கு ரூ.20.00 கோடி கடன் வழங்க தேசிய துப்புரவுப் பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழக நிறுவனத்தால் அனுமதிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## 1.14 தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் நிதியினை குறைந்த வட்டிக்கு பெற்று தாட்கோ மூலம் பழங்குடியினருக்கு பருவக்கடன் வழங்கப்படுகிறது.

தேசிய பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து ரூ.20.00 கோடிக்கு நிதி பெற்று வழங்கிட அரசால் அனுமதி அளிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பழங்குடியின மாணாக்கருக்கு மருத்துவம், பொறியியல், செவிலியர் போன்ற படிப்புகள் பயில

தாட்கோ மூலம் குறைந்த வட்டியில் கல்விக்கடன் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2022–2023–ஆம் ஆண்டு 2 பழங்குடியின மாணாக்கருக்கு ரூ.15.84 இலட்சம் கல்விக் கடன் வழங்க அனுமதி அளிக்கப்பட்டு முதல் தவணைத் தொகையாக ரூ.3.96 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

## 2. இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்

பொருளாதார நிலையில் குறைவாக உள்ள இளைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பதும் அவசியம் ஆகும். எனவே, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் / தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## 2022–2023–ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட வேலை வாய்ப்புடன் கூடிய சிறப்புப் பயிற்சிகள்

### 2.1 இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) மெட்ராஸ் மூலம் பட்டப்படிப்பு

பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணாக்கர், இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) மெட்ராஸ்–இல் இணைய வழியாக வழங்கப்படும் இளங்கலை தகவல் அறிவியல் மற்றும் பயன்பாடு (BS–Data Science and Application) நான்கு வருட பட்டப்படிப்பினைப் பயில நுழைவுத் தேர்வுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, அதில் தேர்ச்சி பெறும் மாணாக்கருக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. மாணாக்கர் ஒரே நேரத்தில் தங்களுக்கு விருப்பமான பட்டப்படிப்பினை படித்துக் கொண்டே இப்படிப்பினை இணையதளம் வழியாக பயிலலாம்.

இத்திட்டத்தின் கீழ் 2022–2023–ஆம் நிதியாண்டில், 75 மாணாக்கருக்கு நுழைவுத் தேர்வுக்கு

ரூ.1.12 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு, நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 9 மாணாக்கர் ரூ.10.09 இலட்சம் செலவில் இப்படிப்பினை பயின்று வருகின்றனர்.

## 2.2 HCL நிறுவனத்தில் வேலைவாய்ப்புடன் கூடிய நான்கு வருட பட்டப்படிப்பு

2020-2021 மற்றும் 2021-2022-ஆம் ஆண்டுகளில் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணாக்கருக்கு HCL நிறுவனத்தில் ஒரு ஆண்டு கால உள்ளுறைப் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புடன் கூடிய பட்டப்படிப்பு பயில நுழைவுத் தேர்வுக்கு 10 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டு, ஒரு ஆண்டு பயிற்சிக்கான நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2022-2023-ஆம் நிதியாண்டில் 148 மாணாக்கருக்கு நுழைவுத் தேர்வுக்கான '10 நாட்கள் பயிற்சி ரூ.11.10 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு, நுழைவுத்தேர்வில் தேர்ச்சி

பெற்ற 19 மாணாக்கர் ரூ.22.42 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றனர்.

## 2.3 ஹோட்டல் மேலாண்மை மற்றும் கேட்டரிங் தொழில் நுட்ப பட்டப்படிப்பு

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணாக்கர், சென்னை தரமணியில் உள்ள ஹோட்டல் மேலாண்மை மற்றும் கேட்டரிங் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் இளங்கலை – விருந்தோம்பல் மற்றும் ஹோட்டல் நிருவாகம் (B.Sc – Hospitality & Hotel Administration) மூன்று வருட முழு நேர பட்டப்படிப்பு மற்றும் உணவு உற்பத்தி பட்டயப்படிப்பு பயில நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2022–2023–ஆம் நிதியாண்டில், இப்படிப்புகளைப் பயில 18 மாணாக்கருக்கு ரூ.24.40 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 2.4 வங்கி போட்டித் தேர்விற்கான பயிற்சிகள்

இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு முடித்த ஆதி திராவிட இளைஞர்களுக்கு அரசு மற்றும் தனியார் வங்கிகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் பங்கேற்று வேலை வாய்ப்பினை பெற சிறந்த பயிற்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

2022–2023–ஆம் நிதியாண்டில், ரூ.9.85 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு, இப்பயிற்சியின் மூலம் 152 இளைஞர்கள் பயன் அடைந்துள்ளனர்.

## 2.5 மருத்துவக் குறியீடு (Medical Coding) பயிற்சி

இளங்கலை மற்றும் முதுகலை அறிவியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணாக்கருக்கு மருத்துவக் குறியீடு (Medical Coding) க்கான பயிற்சி அளிக்கப்பட்டு இந்திய மென்பொருள் நிறுவனங்களில் மருத்துவ குறியீட்டுக்கான வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது.

2022–2023–ஆம் நிதியாண்டில், 300 மாணாக்கருக்கு ரூ.16.38 இலட்சம் செலவில் பயிற்சி ஆணை வழங்கப்பட்டு, அதில் முதற்கட்டமாக பயிற்சி முடித்த 84 மாணாக்கருள் 50 மாணாக்கர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மீதமுள்ள மாணாக்கருக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

## 2.6 ட்ரோன் (Drone) இயக்கப் பயிற்சி

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு விவசாய நிலங்களில் பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் நுண்ணுயிர் உரங்களை ட்ரோன் கருவி மூலம் தெளிப்பதற்கு மெட்ராஸ் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி, விண்வெளி ஆராய்ச்சி மையம் மூலமாக ட்ரோன்கள் இயக்குவதற்கு பயிற்சி பெறவும் மற்றும் சொந்தமாக ட்ரோன்கள் வாங்கி பயன்படுத்துவதற்கும் மானியத்துடன் கூடிய கடன் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

2022–2023–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.96.44 இலட்சம் செலவில் 243 நபர்களுக்கு பயிற்சி

வழங்கப்பட்டு சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA) மூலம் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.7 விமான நிலைய வாடிக்கையாளர் சேவை பயிற்சி

பன்னிரெண்டாம் வகுப்பு மற்றும் பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களுக்கு விமான நிலைய வாடிக்கையாளர் சேவை பயிற்சி வழங்கப்பட்டு, அதன் தொடர்புடைய நிறுவனங்களில் பணிபுரிய வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ரூ.83.69 இலட்சம் செலவில் 490 மாணாக்கர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

## 2.8 கணக்கு நிர்வாகப் (Accounts Executive) பணி சம்பந்தப்பட்ட பயிற்சி

இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களுக்கு வங்கியல்லாத நிதி நிறுவனங்கள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் இதர நிதி நிறுவனங்களில் கணக்கு நிர்வாகப் பணிக்கான வேலைவாய்ப்பினை பெறுவதற்கு (Accounts Executive)

பயிற்சிகள் வழங்கப்பட்டு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படுகிறது.

2022–2023–ஆம் நிதியாண்டில் ரூ.11.59 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு, 90 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

## 2.9 ஒப்பனையியல் பயிற்சி

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற இளைஞர்களுக்கு அழகு நிலையங்களில் வேலைவாய்ப்பு பெறவும், சொந்தமாக அழகு நிலையம் அமைப்பதற்கும் முன்னணி பயிற்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ரூ.12.06 இலட்சம் செலவில், 46 நபர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

## 2.10 வேலை வாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்கான பயிற்சி (Aspiring Minds Computer Adaptive Test)

இளநிலை மற்றும் முதுகலை இறுதியாண்டு படிக்கும் மாணாக்கர் வேலை வாய்ப்புக்கான போட்டித்

தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையில், ஆதி திராவிட மாணாக்கருக்கு ரூ.7.60 கோடி செலவிலும், பழங்குடியின மாணாக்கருக்கு ரூ.2.40 கோடி செலவிலும் பயிற்சி வழங்கப்படுகிறது.

## 2.11 பொது நுழைவுத் தேர்வு பயிற்சி (Common Admission Test – CAT )

இளநிலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு முடித்த மாணாக்கருக்கு இந்திய மேலாண்மைக் கழகம் (IIM) மற்றும் இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) போன்ற கல்வி நிறுவனங்களில் முதுகலை வணிக மேலாண்மை (MBA) மேற்படிப்பு படிக்க நடத்தப்பெறும் பொது நுழைவுத்தேர்வில் தேர்ச்சி பெறும் வகையில் தலைசிறந்த பயிற்சி நிறுவனங்கள் மூலமாக 100 மாணாக்கருக்கு ரூ.50.00 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்படுகிறது.

இவை மட்டுமன்றி இதர துறைகளில் படித்த இளைஞர்களுக்கு கீழ்க்கண்ட பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

- ஆயத்த ஆடை வடிவமைத்தல், வீட்டு அலங்கார பொருட்கள் வடிவமைத்தல் தொடர்பான பயிற்சிகள்
- தானியங்கி மற்றும் தொடர்புடைய பயிற்சிகள்
- மின்னணு மற்றும் வன்பொருள் தொடர்பான பயிற்சிகள்
- தோல் தொழில் நுட்பம் அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்.

## 3. கட்டுமானப் பணிகள்

தாட்கோ நிறுவனத்தின் கட்டுமானப் பிரிவு, இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள், வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், கழிவறை, சுற்றுச்சுவர், விடுதிகள் மற்றும் சமுதாயக் கூடங்கள் ஆகியவை கட்டும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ரூ.37.66 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள விடுதிகள், பள்ளிக் கட்டடங்கள் மற்றும் செங்கல்பட்டு,

திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, தென்காசி மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள தாட்கோ மாவட்ட அலுவலகங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தாட்கோ கட்டுமானப் பிரிவு மூலம் தற்போது பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.380.00 கோடி மதிப்பிலான 426 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2022-2023-ஆம் நிதியாண்டின் பணிகள் விவரம்

| திட்டம் | கூறுகள் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| ஆதி திராவிடர் நலம் | விடுதிகள் | 50 | 151.55 |
| பழங்குடியினர் நலம் | விடுதிகள் | 9 | 17.29 |
| நபார்டு | விடுதிகள் | 2 | 2.52 |
| ஆதி திராவிடர் நலம் | பள்ளிகள் | 42 | 6.01 |
| பழங்குடியினர் நலம் | பள்ளிகள் | 38 | 19.87 |
| ஆதி திராவிடர் நலம் | சுற்றுச் சுவர் | 61 | 10.76 |
| நபார்டு | XXV & XXVIII | 166 | 113.13 |
| ஆதி திராவிடர் நலம் | சமுதாயக் கூடம் | 48 | 41.52 |
| BJRCY | விடுதிகள் | 10 | 17.35 |
| **மொத்தம்** | | **426** | **380.00** |

### 3.1 ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் பணிகள்

பாபு ஜெகஜீவன் ராம் சத்ரவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் மாணவ, மாணவியருக்கான

13 விடுதிக் கட்டடங்கள் ரூ.21.80 கோடி மதிப்பீட்டில் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டு 3 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு 10 விடுதிகள் பல்வேறு மாவட்டங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

செங்கல்பட்டு மாவட்டம் – குமிழி, திருப்பத்தூர் மாவட்டம் – கீழூர், திருவண்ணாமலை மாவட்டம் – புளியம்பட்டி, நாமக்கல் மாவட்டம் – செங்கரை மற்றும் நீலகிரி மாவட்டம் – மு.பாலாடா ஆகிய 5 இடங்களில் இயங்கி வரும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கான பள்ளி வகுப்பறை மற்றும் ஆய்வுக்கூடங்கள் மற்றும் இருபாலருக்கான விடுதிக் கட்டடங்கள் ரூ.60.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

### 3.2 மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள்

தரம் உயர்த்தப்பட்ட ஆதி திராவிடர் நல மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்கள்,

விடுதிகள், சுற்றுச்சுவர் மற்றும் சமுதாயக் கூடங்கள் கட்டுதல், சிறப்பு பழுதுபார்க்கும் பணி மற்றும் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ் கல்வராயன் மலையில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மாநில அரசின் நிதியுதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது, மாநில அரசின் நிதியிலிருந்து ரூ.247.02 கோடி மதிப்பீட்டிலான 248 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 3.3 நபார்டு திட்டப்பணிகள் (ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி)

தற்போது, நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன் ரூ.115.65 கோடி மதிப்பீட்டிலான 168 கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## IV. தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம்

தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம் தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டப்பூர்வமான உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் அவர்களது பிரச்சனைகளுக்கு தீர்வு அளித்தல் ஆகிய நோக்கங்களுடன் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் அமைப்பாக உருவாக்கப்பட்டு 13.10.2021 முதல் செயல்பட்டு வருகிறது.

சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் இவ்வாணையத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேலும், இவ்வாணையத்திற்கு ஒரு துணைத் தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவர்களது பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும். மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் உறுப்பினர் செயலாளராக உள்ளார்.

இவ்வாணையத்தில் இதுவரை 1,826 மனுக்கள் பெறப்பட்டு அவற்றுள் 987 வழக்குகள் முடித்து வைக்கப்பட்டுள்ளன.

## V. நலக் குழுக்கள்

### அ) மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் 1989 மற்றும் திருத்தச் சட்டம் 2015, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 2016, ஆகியவற்றின் செயலாக்கம் மற்றும் இச்சட்டத்தின் கீழ் பதியப்பட்டுள்ள வழக்குகள் குறித்து ஆய்வு செய்தல், வன்கொடுமைக்கு ஆளானோருக்கு வழங்கப்பட வேண்டிய தீருதவிகள் மற்றும் இச்சட்டத்தை செயல்படுத்தும் பல்வேறு அலுவலர்கள்/ அமைப்புகளின் பணி / பங்கு குறித்தும் ஆய்வு செய்தல் ஆகிய நோக்கங்களுடன் மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்குழு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாண்புமிகு அமைச்சர்கள்,

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் முதல் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது தலைமையில் 19.08.2021 அன்றும் 2022–ஆம் ஆண்டிற்கான கூட்டம் 12.04.2022 அன்றும் 2023–ஆம் ஆண்டிற்கான கூட்டம் 11.04.2023 அன்றும் நடைபெற்றது.

## ஆ) தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையில் விதி எண்.4(1)–இல் கூறப்பட்டுள்ளவாறு, தமிழ்நாட்டில் வாழும் பழங்குடியினரின் நலன் மற்றும் அவர்களது முன்னேற்றத்திற்கு ஆலோசனை வழங்கும் விதமாக பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் 1961–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

இம்மன்றத்தின் தலைவராக மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களும் மற்றும் உறுப்பினர்–செயலராக பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களும் உள்ளனர். இம்மன்றத்தில் 3 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், பழங்குடி இனத்தைச் சார்ந்த 15 அலுவல் சாரா உறுப்பினர்களும், பழங்குடியினர் அல்லாத அலுவல் சாரா 2 உறுப்பினர்களும் சேர்த்து 20 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# VI. நல வாரியங்கள்

## 1. புதிரை வண்ணார் நல வாரியம்

புதிரை வண்ணார் சமுதாயத்தின் சமூக, பொருளாதார கல்வி மேம்பாட்டிற்கென மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 2009–ஆம் ஆண்டு புதிரை வண்ணார் நல வாரியம் அமைக்கப்பட்டது.

இவ்வாரியத்தில் 12 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாரியத்தின் உறுப்பினர்–செயலர் ஆதி திராவிடர் நல இயக்குநர் ஆவார்.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 2,276 உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதியுதவி வழங்கிட 2009–ஆம் ஆண்டு முதல் 2012–ஆம் ஆண்டு வரை ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

புதிரை வண்ணார் நல வாரியத்திற்கு புத்துயிர் அளித்து, வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள 2023–2024 ஆம் நிதியாண்டில் ரூ.10.00 கோடி கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 2. தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம்

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தாருக்கு கல்வி, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்து, அவற்றின் முன்னேற்றத்தை உறுதி செய்திடும் பொருட்டு 2007–ஆம் ஆண்டு 'தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம்' அமைக்கப்பட்டது.

இவ்வாரியத்தில் ஒரு துணைத் தலைவர், 13 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் 14 அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தாட்கோ மேலாண்மை

இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்–செயலராக உள்ளார்.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள 68,700 உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் பொருட்டு ரூ.3.00 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2022– 2023 ஆம் நிதியாண்டில், 6–வது மாநில நிதி ஆணையத்தின் மூலம் தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்திற்கு ரூ. 15.00 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

2022–2023 ஆம் நிதியாண்டில், வீடற்ற 500 தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு ரூ.55.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு அரசு மானியம் 90 விழுக்காடு, வாரியத்தின் பங்களிப்பு 9 விழுக்காடு மற்றும் 1 விழுக்காடு பயனாளிகளின் பங்களிப்புடன்

வீடுகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3,078 உறுப்பினர்களைக் கொண்ட 13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுகாதார அங்காடிகள் அமைப்பதற்கு ரூ.98.00 இலட்சம் மானியம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## 3. பழங்குடியினர் நல வாரியம்

தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென பழங்குடியினர் நல வாரியம் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராக கொண்டு 2007–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் 8 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும் 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். பழங்குடியினர் நல இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்–செயலராக உள்ளார்.

இவ்வாரியங்கள் மூலம் இயற்கை மரணம், விபத்து மரணம் ஆகியவற்றிற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித்தொகை, ஓய்வூதியம் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## VII. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 2023–2024–ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு

(ரூ . கோடியில்)

| வ. எண். | அலுவலகங்கள் | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தலைமைச் செயலகம் | 13.77 | 0 | 13.77 |
| 2. | ஆதி திராவிடர் நலத்துறை | 2608.20 | 246.43 | 2854.63 |
| 3. | பழங்குடியினர் நலத்துறை | 389.23 | 250.60 | 639.83 |
| 4. | தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம் | 4.62 | 0 | 4.62 |
| மொத்தம் | | 3015.82 | 497.03 | 3512.85 |

**என். கயல்விழி செல்வராஜ்,**
**ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.**




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது தலைமையில் மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக்கூட்டம் 11.04.2023 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது தலைமையில் 06.02.2023 அன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.




பத்மஸ்ரீ விருது பெற்ற இருளர் பழங்குடியின பாம்புபிடி வீரர்கள் திரு.மாசி.சடையன் மற்றும் திரு.வடிவேல் கோபால் ஆகியோர் குடும்பத்தினருடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றனர்.




9-வது தேசிய அளவிலான பழங்குடியினர் கைவினைப் பொருட்கள் விற்பனை விழாவில் பூத்தையலுக்காக தேசிய அளவில் முதல் பரிசு பெற்ற தோடர் பழங்குடியின பெண்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றனர்.




ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கிடையேயான 3-வது தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ / மாணவியர் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோரிடம் வாழ்த்துப் பெற்றனர்.




அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த பழங்குடியின மக்களுக்கு முந்திரி சேகரம் செய்வதற்கான ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.




ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் கட்டப்பட்டுள்ள புதிய விடுதிகள், பள்ளிக் கட்டடங்கள் மற்றும் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களுக்கான தாட்கோ அலுவலகங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 02.11.2022 அன்று திறந்து வைத்தார்கள்.




ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கென தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டம் காட்டூர், பாப்பாக்குறிச்சி அரசு ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், அரசுப்பள்ளி மாணவர்களின் அறிவியல் மற்றும் கணினி ஆர்வத்தை தூண்டும் வானவில் மன்றத்தினை தொடங்கி வைத்து, 100 நடமாடும் அறிவியல் மற்றும் கணித ஆய்வகங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்.




ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கத்தால் தேர்வு செய்யப்பட்ட 21 சிறந்த எழுத்தாளர்களுக்கு நிதியுதவி மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாணாக்கருக்கு மிதிவண்டி வழங்கும் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்கள்.





தாட்கோவின் புதுப்பிக்கப்பட்ட இணைய தள சேவையை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.




மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் புதுப்பிக்கப்பட்ட பழங்குடியினர் அருங்காட்சியகத்தை துவக்கி வைத்தார்.

# 2022-2023 பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்


## பயனாளிகள்





## மானியம்



## தொழில் வாரியான ஒப்பீடு




திறன் மேம்பாட்டுப் பயிற்சி
ரூ.(இலட்சத்தில்)
10.09
9
ஐ.ஐ.டி
50.00
18
ஹோட்டல் மேனேஜ் மெண்ட்
34.00
19
எச்.சிஎல்
12.06
46
அழகுக் கலை
12.00
90
கணக்கு நிர்வாகம்
9.85
152
வங்கி சேவை பயிற்சி
96.44
243
ட்ரோன்
16.38
300
மருத்துவக் குறியீடு
36.72
490
விமான சேவை பயிற்சி

# கட்டுமானப் பணிகள்

| | | |
|---|---|---|
| 3 | BJRCY விடுதிகள் | ரூ. 4.50 கோடி |
| 9 | ஆதிதிராவிடர்,பழங்குடியினர் நலம் மற்றும் நபார்டு விடுதிகள் | ரூ. 13.35 கோடி |
| 188 | ஆதிதிராவிடர்,பழங்குடியினர் நலம் மற்றும் நபார்டு பள்ளிகள் | ரூ. 89.83 கோடி |
| 8 | ஆதிதிராவிடர் நலம் சமுதாயக்கூடம் | ரூ. 5.06 கோடி |
| 14 | ஆதிதிராவிடர் நலம் சுற்றுச்சுவர் | ரூ. 3.06 கோடி |



அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.